[illegible]

V.2 NO. 29 23 July 1929

x
ಉ211, N28KN
M29.2.29
189066

KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு ஜூலை மீ 25உ [No. 29.

OFFICE OF THE ... 1929 MADRAS

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 561 |
| 2. | வில்லிபாரதம் (காண்டவதகனச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B.A., B.L. | 5'3 |
| 3 | கலைத்திறம் நுனிக்கும் கலைஞன் (Oscar Wilde) K. இராஜகோபாலன் | 565 |
| 4. | குலசேகரர் (பேயாழ்வார்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 567 |
| 5. | மாறன் பாப் பாவினம் (பரிபாடல்) | 570 |
| 6 | அப்பர். E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 570 |
| 7. | தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை) | 571 |
| 8. | கம்பராமாயணம் (வரைக்காட்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L. | 574 |
| 9. | மதிப்புரை (பெருமாள் திருமொழி) | 576 |
| 10 | வர்த்தமானம் | 579 |


சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு• தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்

### கல்சரின் அவசியம்.

IV

சங்கங்களையும் செல்வத்தையும் எந்திரமென்னும் தன்மையில் மதிப்பது மறந்து விவகரிப்பது போன்றே பின்னுஞ் சிலவற்றை இந்நாள் பலர் கையாளுகின்றனர். ஜனத்தொகை, தேகபலம் சுகாதாரம் முதலியவைகளும் அவ்வவைகளுக்குரிய நடுநிலை தடுமாறிச் சுழல்கின்றன. இவைகளும் வேறோர் உண்மை நலம் எய்துவதற்கு இயன்ற எந்திரங்களே. எனினும், இவைகளையே முடிவெனக்கொள்ளாது, அவைகளால் எய்தவேண்டி அப்பால் நிற்கின்ற நேர்மையை நோக்குவார் இற்றைநாளுலகத்தில் எத்தனைபேர் உளர்! இருக்கின்ற ஜனங்களை அடக்குமுறையால் ஆள்கின்றார் சிலரெனின், பிறவாத பிரஜைகளுக்குத் 'தடையுத்தரவு' விதிக்கின்ற இப்புதிய இயக்கத்தை என் சொலி வியப்பது! "அப்பனே, அம்மையே", என்று நம்கடவுளை நேர்மையோடழைக்க நமக்கு வாயுண்டாயின், பின், "மக்களே, நீர் எத்தனைபேர் என்பால் பிறந்துவிட்டீர்" என்று கணக்கெண்ணி ஏங்கவேண்டி நேரிடாது. எந்தையாம் அருட்பெருமிறைவனுக்கு ஆளாகும் வகையற்றுப்போனதால் சிலர் தாம் சிலமக்களைப் பெற்றெடுக்க அஞ்சுகின்றனர். கல்சர் விளைக்கின்ற செம்மையும் அமைதியும் சேராத பேய்மனதையண்டியே தாயிலாப்பிள்ளைபோற் பித்தாகித் திரிபவர் தாம் தாய்களாகக் கூசுகின்றனர். சுமையெடுமின் என்று தான் சும்மாடுமாய்ச் சுமையாளுமாக்கி நாளும் கூத்தாடுகின்ற மனமாயையுட்பட்டுழல்வோர் பிறக்க வரும் பேதைமக்களைத் தமக்கும் நிலத்திற்கும் சுமையெனக்கருதிக் கடைபிடிக்கின்ற கொள்கையிது. தடைமுறை எத்துணையிருப்பினும் பிள்ளைகள் ஒன்றிரண்டு மீறிப் பிறந்தேதீரும். ஆயின் அவர்களைப் பார்க்குந்தோறும், "கள்வ, காவல் கடந்து நீ எம்வயின் பிறந்தனை" என்று எண்ணவேண்டிய ஈன்றோர் மனநிலையிற் பெருமை இல்லையே. பிறந்தபிள்ளையும் ஈதுணரும் வயதுவந்தவுடன், "எந்தாய், வேண்டா வெறுப்பாகவோ, என்னை ஈன்றீர்" எனக் கேட்க வேண்டிய கேள்வியிலும் பெருமையில்லை. கல்சரால் பண்பட்ட மனது இந்நிலையையுங் கேள்வியையும் நினைக்கவே நாணும். பகுத்தறிவும் மனோபாவமுங் கொண்டு மாசுமறுவற்ற தூய்மையாய செம்மையின் முழுமை யெதுவெனத் தேர்ந்து, அதுவே கடவுளின் கருத்தும் ஆகலாவதையும் ஓர்ந்து, அதனை நடத்தி வைக்கும் நினைவோடு நிகழ்கின்ற கல்சரோ, வழங்குவோர் வாய்நின்று வழங்குகின்ற மொழிகளெல்லாம்

189064
K. C. R. 700 24-7-29

தனக்குச் சிறிது சுகத்தைத் தருவனபோல் தோன்றுமளவிலேயே தக்கனவாம் என்று விரைந்து அலையாமல் சிந்தனையுள் ஆழ்ந்திருக்கும். ஜனத்தொகை இவ்வளவு, அதற்குக் கிடைக்கக்கூடிய உணவுப்பொருள் இவ்வளவு, என்று துலாக்கோல் தூக்கி, இனிப்பிறக்கப்போகின்றவர்களுக்கு உணவுகிடைக்குமோகிடைக்காதோ வென்று கணக்கிடுவதன்முன், பிறந்திருந்து உண்டுவளர்கின்ற நாம் என்செய்தோம் என்பதனையே கல்சர் ஆராயப்புகும். பிறக்கப்போகின்றவர் உண்ணவுணவின்றி இறக்க நேர்வதன்முன் இந்நாள் இருக்கின்றவர், குறைவிலாது உண்பதற்கு உணவும் இருப்பவர், எண்ணரிய நோய்களால் நைந்து மாள்வ தேனென வினவும். வினவுங்கால் கடவுளின் கருத்திற்கு விரோதமாக நடப்பதால் இது நேர்கின்றதென்பதை உணர்வது கல்சருக்கு அருமையன்று. காற்றும் வெயிலும் வெளியிடமும் வேண்டிய உயிர்களைப் பாடசாலைகளிலும் வியாபார உத்தியோகக் கட்டிடங்களிலும் அடைத்துப் பிசைந்து தின்கின்றவோர் வாழ்க்கையை இன்றியமையாததாக்கி அதற்கு நாடகக் கூட்டங்களையும் குதிரைப் பந்தையங்களையும் பக்கபலமாக வைத்தால், இனிப் பிறக்கப்படாத பிள்ளைகள்தாம் நம்மைக் காப்பாற்றவேண்டியவர்களாகின்றனர் போலும். "கைத்தொழிலும் வர்த்தகமும் கட்சிப்போரும் வேண்டியதாலல்லவோ பட்டினத்திலும் பாடசாலைகளிலும் தொழிற்சாலைகளிலும் இரயில் வண்டிகளிலும், நியாயஸ்தலங்களிலும், எட்டடிவீட்டில் இருபதுபேருமாக அடைகின்றீர். அடைந்து மனமும் மெய்யுந் தளரத்தளரப் புழுதியளைந் துழல்கின்றீர். வாழ்வின் நோக்கம் இதுவன்று, கடவுளின் கருத்து இதுவன்று, என்பது நீங்கள்படும் கஷ்டத்தினாலேயே தெரிந்ததில்லையோ. மனவமைதியும் சித்தசுத்தியும் நல்குகின்ற நெறியொன்று வேறுளதாதலால் இதனை விடுமின். உழுதுண்டு வாழ்வதே வாழ்வென்னும் பொய்யாமொழியைப் புறக்கணித்த பாவம் எழுபிறப்பும் உங்களைத் தொடர்கின்றது," என்று இன்னபல உண்மைகளைக் கல்சரானது நமக்கு அழஅழச் சொல்லும்.

தேக ஆரோக்கியம் வேண்டற்பாலதே எனினும் அதன் வரையில் அதற்கோர் விலையில்லை. கற்றதனாலாய பயனை வாலறிவன் நற்றாள் தொழுவதிற் காண்பதே போன்று, "ஆக்கையாற் பயனென், அரன் கோயில் வலம்வந்து பூக்கையால் அட்டிப்போற்றி என்னாத இவ் ஆக்கையாற் பயனென்?" என்று அப்பரோடு ஒருவாயாய்க் கல்சர் இந்நாளிலும் அஞ்சாது கேட்கும். நோயற்றவாழ்வு ஒருவன் வேண்டுவது எற்றுக்கு? வியாதியால் விளையும் வேதனையைக் தப்புவதற்கேயாயின், அதற்குத் தற்கொலை என்பதும் தக்க வழியாகுமே. நோ யில்லாதிருந்த நல்லநாட்களில் அவன் எண்ணற்கரிய எண்ணங்கள் என் நினைத்தான்; செயற்கரிய என் செயமுயன்றான். "சுகமோ, தம்பி, நீ! முதல் முதல் சுகமாயிருந்தாலென்ன? இல்லாமற் போனாலென்ன! அதனால் வித்தியாசம் ஒன்றும் இல்லையே!" என்று கார்லைலின் மொழிவழி கல்சர் கேட்கின்றது.

"அற்றன்று அற்றன்று; செல்வத்தையும் சனத்தொகையையும் சங்கங்களையும்போல், தேகசுகத்தையும் சக்தியையும் வெறும் எந்திரவகையில் மதித்திடலாகாது. இவைகளுக்குத் தம்வரையிலேயே வாஸ்தவமான உபயோகமுளது" என்று சிலர் கூறலாம். மற்றவைகளைவிட இவைகள் ஆன்மநிலையோடு நெருங்கிய தொடர்புடையன என்னுந்தன்மையில் அவ்வுரை உண்மையே. ஆன்மநிலை யடையுமொரு நோக்கமே முன்னிற்க அதற்கு நம் உடல்மெலிவு இடையூறாய் இருக்கின்றதென இரங்குவோமாயின், அப்பொழுதே இவ்வுடலையும் ஓர் எந்திரமாகக்கருதி அதனைத் தக்கநெறியில் பாதுகாக்க வேண்டியவர்களாவோம். அதுவன்றி உடல் உடலுக்காகவே போற்றுபவராதல், மற்றெல்லா எந்திரங்களையும் முழுமுதல் நன்மையெனவழிபடும்இழிவுடைப் பேதைமையையே ஒக்கும். அரிதரி தெனும்படி மாநுடராயதன் அருமையை உள்ளபடி உணர்ந்தோர் அனைவரும் தேகத்தைப்பற்றிய நினைவிற்கு முதலிடந்தரமாட்டார். கல்சரால் பண்பட்டிராதகுணமே, தேகப்பயிற்சியைப் பற்றியும், உண்ணும் உணவின் வகைகளைப்பற்றியும் அளவுகடந்த ஆரவாரம் செய்யலாகும். இவையெலாம் இடைஇடைச் சிறிது சிந்தித்தற்கொத்தனவே யன்றித் தலைமேற்கொண்டு திரியத்தகுவன வாகா: தெய்விக உணர்வும் தருமசிந்தனையும் உருப்பெற்றோங்கி ஒருவன் உள்ளத்தே வளருமாறு எவ்வாறு என்னுமந் நினைவிற்குக் காலை பகல் மாலை முப்பொழுதும் ஆளாகிநிற்றலே மாந்தரெனும் நிலைக்குரிய எவ்வெவர்க்கும் கடனாகும். அதுவல்லாதாரைக் கார்லைல், "வயிற்றில் யானைத்தீப் பற்றியெரியத் தலையிலும் களிமண்பிடித்தகயவர்தாம் தின்னுஞ் சோற்றிற்குப் பதம்பார்த்துக் குறைகூறியவண்ணமா யிருப்பர்" என்று கடிகின்ற சொற்கள் மிகைபடக் கடுமையா யிருக்கின்றனவெனினும், உண்மையுடன் பொருந்தியே நடக்கின்றன. "மற்றவர், உணவுதேடி உண்டபின் சாதிப்பதென்னவெனச் சிந்திப்பர்," எனக் கார்லைல் வகுக்கும் இலக்கணம் உடலொடு தொடர்புடைய அனைத்திற்கும் ஏற்றதாகும்.

இன்னபடி பண்பட்ட குணமுடைமை கல்சரின் பயன். அன்பினது இன்பமும் அறத்தினது அறிவும் எங்கெங்கும் வியாபித்து நம் வாழ்க்கை பண்பும்பயனும் உடையது ஆவது கல்சரின் நோக்கம். மேன்மையானவைகளிலெல்லாம் மேன்மையானவை இத்தகைய இனிமையும் அறிவும் ஆம். இவையிரண்டுமே மக்களை விலங்கின் தொகுதியினின்று வேறுபடுத்தி வாழ்க்கையென்னுந் தத்துவத்தின் முழுமையை அளிக்கவல்லன. வாழ்வில் அமைவதெனுங் கருத்து இவ்வன்பின் இனிமையையும் அறிவின் ஒளியையும் நாடுமந்நிலை யொன்றிற்றான் அடங்கியிருக்கின்றது. இவ்வினிமையையும் ஒளியையும் தானும் எய்திப் பிறர்க்கும் எய்துவிக்க முயல்கின்றவர்களே, பகுத்தறிவையும் கடவுளது கருத்தையும் நடத்திவைக்கின்றவராவர். மற்று, எந்திரங்களை நாட்டுதற்கு உழல்பவர், வீண்பகைக்கும் கலகக்குழப்பங்களுக்குமே பாடுபடுகின்றனர். எந்திரங்களைக்கடந்து அப்பால் காணவல்ல கண்களுடையது கல்சரே. பகையைப் பகைக்கின்றது கல்சர். இனிமையின்பால் ஒளியின்பால் கல்சர் மையலுற்றுத் தன்னையும் அவைகளுக்குத் துறந்துநிற்கும். இம் மையலிற் பெரியது யாதெனில், இவ்வினிமையும் ஒளியும் உன்னத நோக்கமாய் உலகெங்கும் உலவவேண்டுமெனும் ஊக்கமே.



விற்கொரு அணிகலமானவள், இருந்தநாட்டில் நாம் உயிர் வாழப்பெற்றிருப்பதும் நமது புண்ணியமே.

உணவளிப்போம் என்றசொற் கேட்டலும் அதையப்போதே பெற்றவன்போற் களிகூர்ந்து வன்னிவானவன் தான் உருமாறி வந்ததன்மையை விளக்கித் தன்னுணவு காண்டவமென்றும், அதனுட் புகுந்து வாய்வைத்து அவாத்திர வுண்பதற்கு இந்திர னிடங் கொடானென்றும், அவன் தன்னேழு மேகங்களையு மேவி அவித்திடாவண்ணம் முகுந்தன் மேனாள் ஆநிரை காத்தவாறு தன்னைக் காக்கவேண்டுமென்றும் இரந்தான். அவ்வாறே அவரிருவரும் அவனுக்கு உறுதி செய்துகொடுக்க, பரவையின்கண் வடவையின் முகத்திற் றோன்றிய கனலெனக் காண்டவத்திடை வன்னியும் தோன்றினான்.

ஆன வாகுலந் தன்னொடு தப்புதற்
கணிபடப் பறந்தோங்குந்
தூநி றத்தன கபோத மொத்தன விடையிடை
யெழுஞ்சுடர்த் தூமங்
கான மேதியுங் கரடியு மேனமுங்
கடகரிக் குலந்தாமும்
வானி லேறுவ போன்றன நிரைநிரை
வளர்தரு கருந்தூமம்.

[இடையிடையே மேனோக்கி எழுந்த சுடரோடுகூடிய வெண்புகைகள் தீயினால்உண்டான துக்கத்தினால்அவ்வனத்தைவிட்டுத் தப்பிப்போவதற்கு எண்ணங்கொண்டு வரிசை வரிசையாய்ப் பறந்து ஆகாயத்தில் செல்லும் வெண்மை நிறமான புறவை ஒத்திருந்தன; வரிசைப்பட வளர்ந்த கரும்புகைக் கூட்டங்கள் காட்டெருமையும், கரடியும், பன்றியும், மதங்கொண்ட யானைக்கூட்டமும் வானில் ஏறுவ போன்றிருந்தன.]

நாம் இளைஞராய் விளையாட்டயரும்போது கார்காலத்தில் வானத்திலுள்ள முகிற்கூட்டத்தைக் கண்டு அது யானையைப் போலவும், மலையைப் போலவும், மற்றுமுள்ள மிருகங்களைப்போலவும் காணப்படுகிறதைக் காட்டிக் களிகூர்வதுண்டு. இக்கவி நமக்கு அக்காலத்தை நினைவூட்டுகிறது. இயற்கையில் மெலிந்த தன்மையையுடைய புறாத் தீயினால்வரும் துன்பத்தைப் பொறாது தப்பிப்போவது இயல்பு. அணிபடப் பறந்தோங்கு மென்பதற்கு அழகாய்ப் பறக்குமென்று பொருள்கூற இடமுண்டென்றாலும் நிரல்படப் போவதென்பதே சிறப்பை யுணர்த்துகிறது. ஆதலால் அப்பொருளே சிறந்தது. ஓங்கும் என்பது ஆகாயத்தில் மேனோக்கிச் செல்வதை உணர்த்திற்று. கானமேதியில் உள்ள கானத்தை மற்ற மொழிகளோடுங் கூட்டிக் காட்டிலுள்ள கரடி ஏனம் கரி என்றும் பொருள்கூறலாம். தூநிறத்த தூமம் என்பதற்குக் கம்பர் ஒதிமங் கலந்தாலென்ன வெம்புகை யென்றார் இலங்கை யெரியூட்டு படலத்தில்.

வரைத்த டந்தொறுங் கதுவிய
கடுங்கனன் மண்டலி னகல்வானி
னிரைத்தெ ழுந்தசெம் மரகத
கனகவா ணீலவெண் ணிறத்தூமந்
தரைத்த லத்தினின் றண்டகோ
ளகையுறச் சதமகன் றடஞ்சாப
முரைத்த தன்வளை வறநிமிர்ந்
தழகுற வோடுகின் றதுபோலும்.

[மலைப்பக்கங்களிலெல்லாம் பற்றிய கொடுமையான தீமூளலால் அகன்றவானத்தில் வரிசையாய்க் கிளம்பின சிவப்பு, மஞ்சள், நீலம், வெண்மை நிறமான புகைகள், நிலவுலகத்திலிருந்து அண்டத்தை அடையவெண்ணி இந்திரனுடைய வில்லானது தனக்கியற்கையான வளைவு நீங்கி நிமிர்ந்து அழகாய் ஓடுகின்றது போன்றிருந்தன.]

பல நிறமுள்ள பொருள்க ளவ்வனத்திடை யிருந்தனவாதலால் புகையும் பல வர்ணமுள்ளதாய் இந்திர சாபத்தை யொத்திருந்தது. வானவில்லை உவமை கூறுவதில் வில்லிக்கு அதிக விருப்பமுண்டு. இது வரையில் இரண்டு மூன்று முறை இவ்வுவமையைக் கையாண்டிருப்பதை மேலே காட்டினோம். புகைகள் விரைவில் ஆகாயத்தை யளாவிச்செல்வதால், வளைவு நிமிர்ந்த வில்லும் தன்றொழில் முற்றப்பெற்றதால் தன்னியற்கை யிருப்பிடம் செல்வதுபோன்றிருந்தது.

கருதி யாயிர கோடிவெம் புயங்கமிக்
கானிடை யுளவென்று
பரிதி சூழ்வர வெருவுபல் குவடுடைப்
பருப்பதங் களின்சாரற்
சுருதி வேள்விநூ றுடையவன் சிறகறத்
துணித்தவாய் தொறும்பொங்கிக்
குருதி பாய்வன போன்றன கொளுந்திய
கொழுந்தழற் கொழுந்தம்மா.

[கணக்கிட முடியாத வெம்மையான பாம்புகள் இந்தக் கானகத்துளவென்று கருதி, சூரியன் அதைச் சுற்றிவரப் பயந்து அப்புறம் செல்லும் பலகுடுமிகளையுடைய மலைகளின் பக்கங்களில் உள்ள, நூறு அச்வமேத யாகங்கள் செய்து இந்திரபதவியை யடையும் இந்திரன் இறக்கைகளில்லாமல் துணித்த இடந்தொறும் இரத்தம் வடிந்தது போன்றிருந்தன மண்டிய செழுத்த தழற் கொழுந்துகள்]

முதலிரண்டடிகள் சூரிய கிரணங்கள் படாது நெருங்கிய மரச்செறிவுடைய சோலைகளடங்கியவைகளும், அச்சோலைகளி னிருளில் சஞ்சரிக்கும் அநேக பாம்புகளை யுடையவையுமான குன்றங்களைச் சிறப்பித்துத் தற்குறிப்பேற்றமாய்ப் பாம்புகள் சூரியனுக்குப் பகையாதலால் அவன் அவ்விடம்வர அஞ்சுகின்றானென்று கூறுகின்றன. அதோடு அவைகளின் உயர்வும் கூறியவாறாயிற்று. தங்கள் சிறகுகொண்டு பறந்து சென்று உலகங்களையழித்த மலைகளின் இறக்கைகளை இந்திரன் அறுத்தெறிந்தானாதலால், அவைகளிருந்த இடத்திலுள்ள வாய்வழி செந்தீ கக்கியது, அவ்வழி குன்றுகளின் குருதிபாய்வது போன்றிருந்த தென்றார் ஆசிரியர். தீயினால் குடர்வெந்து குருதி பாய்ந்ததென்றுவது, ஆறியபுண்ணிற் றீப்பட வெந்து குருதி மீண்டு பாய்ந்த தென்றுவது கொள்ளவேண்டும்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

OFFICE OF THE REG
MADI
K. CR. 710
24-7-29

# கலைத்திறம் நுனிக்குங் கலைஞன்.

[The Critic as Artist—Oscar Wilde]

547 வதுபக்கத் தொடர்ச்சி

எர்னஸ்ட்:—புலவன் உணர்விற் பிறந்தவோர் உலகினிடை மக்கள் குடிபுக்கு வைகுதற்கு நீ காட்டும் ஊக்கத்தில், அன்ப, எனக்கொன்று தோன்றுகின்றது. மனத்தின் தொடர்பிலாது மகிழ்வதும் வருந்துவதுமாய செயல் சிறிது நேர்மைக்குப் புறஞ்செல்லும் செய்திபொன்றன்றோ? நீயே சொல்.

கில்பர்ட்:— பாவலன்தன் அண்டத்தளவு அளாவும் உணர்வின்பால் முளைத்தெழுந்த இன்பமயமாய கலையுலகில் ஆர்வமுடன் நாமமர்ந்து வாழ்வோமேல், ஐய, புலன்கள் அவாவும் சேட்டையெலாம் சாம்பராகித் துன்பமிலா நன்மையாவும் நமதாகப் பெற்றிடுவோம்; பூரணமாம் இரகசியத்தின் நடமாட்டம் நமதாய வாழ்விடையே வந்தடையும். சரதமிது, சந்தேகங் கொள்ளவேண்டா. ஐய, நீ சற்றுச் சிந்திப்பாய். உள்ளத்தின் தொடர்புடைய மனக்கிளர்ச்சி ஒருவனிடம் எழுந்திடுங்கால், அக்கிளர்ச்சிக்குப் பின் நீங்காச் சாபமெனத் தொடர்ந்துவருவது யாதென நீ கருதியது உண்டோ. நிறைவின் தத்துவத்தைப் பெற்றிடற்கியலாது, குறை என்னும் சிறுமைத் 'தொடர்' ஒன்று நீ கூறிய வாசகத்தைத் தொடர்கின்றது. நின் மண்ணுலக ஓட்டாட்ட வாழ்க்கையின்கண் 'அவனுற்றுன் இடுக்கண்,' 'இவன்பெற்றுன் இந்நலம்' என்று நீ வருந்துவதும் மகிழ்வதுமாய செய்திகளில் மனத்தின் தொடர்பு இருக்கின்றது. முன்னதனில் உற்றவொன்று இல்லாதுபோகவும், பின்னதில் இனியொன்றைப் பெற்றிடவும் விரும்பலாகின்றோம். இவ்விருப்பத்திற்கு எல்லைதா னுண்டோ? எனவே இத்தகைய மனக்கிளர்ச்சிக்குப் பிறகு, 'இதுவேண்டும்' 'அது வேண்டா' என்றவொரு சிந்தனையும், அன்னதற்கான முயற்சியும் முன்னிற்க, நித்தியமான இன்பத்திற்கு இடமிலாது போகின்றதென்பதைத் தெளிவது அருமையன்று. ஒன்றை நச்சி உழல்வதற்கும் அதுவந்து அடையாக்கால் குறையுற்று வாடுவதற்குமோ, நாம் இந்நிலவுலகில் பிறந்தோம். குறையேயாய இவ்வாழ்க்கையைப் பற்றிநாம் தொடர்வதெல்லாம் நரகத்தை நாடி நடப்பதேயல்லாது வேறு என். ஆன்மவளர்ச்சிக்கு இவ்வீண்வாழ்க்கை ஏற்றதொன்றன்று. கலையே நமக்குக் கதி கலையிற்பயிலும் காமச்செய்தியும் கொலையும் சதியும் வீரத்தின் சாகசமும், இன்பமும் துன்பமும் ஆய நிகழ்ச்சியெலாம் இன்பத்தின் இருக்கையாகும். தொடர்பொன்றுமிலாது உவக்கவும், வெருளவும், இரங்கவும் வியக்கவும், நையவும் இயக்கிவைக்கும் இயல்பினது பெருமைசால் கலை. கிரேக்கிய புலவன் ஒருவன் கூறியதுபோல் ஆன்மவளர்ச்சிக்கேயிடமிலாத நுகர்ச்சி என்னும் நமன் வாயினின்று நம்மைப் பரிவுடன் காத்து நமது வாழ்வைப் படிப்படியாய் உயர்த்தி இன்பத்தின்பாற் கொண்டுசேர்க்கின்றது அது. இவ்வுலகத்தை நயந்து நிற்போர் நிறைவையென்றும் எய்தப்பெறுது கானல்நீர் வேட்டையினுட் படுவாராவர். நாம் வேண்டுவது குறையிலாவின்பமா? அல்லது கூற்றுவன் உறவினில் களிக்கும் வாழ்க்கைதானே? கூறுவாய்!

நேர்மை நேர்மை யென்கிறுய், நேர்மையின் எளிமையை நீ யறியாய். நேர்மைக்குப் புறமான செய்திகட்கு உவந்து இடமருளியுள்ளாள் கலைச்செல்வி என்னின் அதற்குப் பொருளிலதோ? நேர்மையிலாச் செய்திகளால் புனையப்பெற்ற காவிய சித்திரங்களும், அவைதம் கதியும் தந்துவைக்கும் தொடர்பற்ற மனக்கிளர்ச்சியிற்றுன் இன்பம் ஊறிப் பெருகுகின்றது. அவ்வின்பத்தின் ஆட்சியினில் அமர்ந்திருப்போன், இழிதகைச் செயல்களில் விழுந்தழிய மாட்டான். பயன்கருதா மனக்கிளர்ச்சியே கலையினது நோக்கம். வாழ்க்கையும், சமுகமென நாமழைக்கும் அதுவுந்தான் செயலினடியதான கிளர்ச்சியை விளைவிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளன. எந்திரமாகச் சுழன்றோடும் வாழ்க்கைக்கு நீ சொல்லும் நேர்மையும் ஒழுங்கும் வேண்டியன. எந்திரம் நடக்கவேண்டாவோ? அவ்வெந்திரத்தின் உறுப்பாய மாந்தர் உழைப்பையும் முயற்சியையும் மேற்கொளல் முறையே. எனவே சமுக நலன் என்றும், நாட்டுநலன் என்றும் சொல்லிக்கொண்டு அச்சொற்களின் அடிமைகளான நாம், தனியே ஒன்று நினைத்தாலும், அதைச் சொல்வதற்கு அஞ்சி, சிற்றினம்சேர்ந்த வோரிடத்தில் உரத்த குரலில், 'நீ என்ன செய்கின்றுய்' என்று வெட்கமிலாது கேட்டுவிடுகின்றோம். இச்சொல் முன் எத்தனை எத்தனை ஆண்டுகளாக முழங்கப் பெற்றிருக்கின்றது. மீண்டும் மீண்டும் அவ்வெச்சிலை வட்டித்தும் வாய்க்கொண்டும் மகிழ்ந்துவருகின்றோம். ஆனால் நாகரிக மனிதன் அடக்கத்துடன் கேட்கவேண்டிய கேள்வியோ, 'நீ என்ன நினைத்தாய்' என்பதே. எனினும், முன்னேற்றம் அடைந்து வரும் நாம், குடிகாரக் கள்வனையும், கொலைகாரப் பாதகனையும் மன்னித்தாலும் மன்னித்துவிடுவோம். கனவொன்று கண்டு தித்திக்கும் கருத்தொன்றைச் சொல்லிவரும் பெருமகனை நாம் மன்னிக்கவே மாட்டோம். எந்திர வாழ்க்கையே வாய்மையென்று கொண்டு வினைசெய்யும் மாந்தர்சிலர் இருக்கின்றனர். அவர்கள் எண்ணம் நல்ல எண்ணந்தான், அவர்களும் நல்லவர்களே. என்றாலும் விஷயம் தெரிந்த ஒருவனுக்கு இப்பேதைகளைக் காணவும் பிடிக்கின்றதில்லை போலும்.

தியானமாம் கருத்துலகில் மன்னிவாழ்தல் பாபத்திலும் பெரிய பாபமெனச் சமுகம் கருதுகின்றது. கல்வியெனும் திவ்ய தத்துவமோ மனிதன் ஒன்றுமே செய்யாது தியானத்தில் அமர்ந்திருப்பதே அவன் செய்யவேண்டிய சரியானவேலையென்று கூறுகின்றது. இப் பேரறிவை நமக்கு ஊட்டிவைக்கப் பெருமகன் ஒருவன் வாரானே? வந்து நமது கலியைத் தீரானே! இல்லையேல், நண்பா, நாம் சீக்கிரத்தில் நசித்து மண்ணொடு மண்ணுய்மடிந்து போய்விடுவோம்.

எர்னஸ்ட்:—தியானமா!

கில்பர்ட்:—ஆம், ஐய, தியானந்தான். ஒன்றைச் செய்வதினும் அதைப்பற்றிப் பேசுவதே கடினமென்று நான் உனக்குச் சற்றுமுன் கூறியதை நீமறந்திருக்மாட்டாய் என்றே கருதுகின்றேன். இப்பொழுதொன்று சொல்கின்றேன், கேள். பேசுவதினு மிகக்கடினமானது என்னவெனில் ஒன்றுமே செய்யாது சும்மா இருக்கும்



நிலையே. அதுதான் பெறுதற்கரிதான பேரறிவின் செயலாகும். அரிஸ்டாட்டில் என்னும் பெரியோன் மெய்யறிவை நாடி முயன்றதெல்லாம் இம்மனமற்ற நன்னிலையைப் பெறுவதற்கே. அவனுக்குப் பின்வந்த பிளேட்டோ என்பவனும் அறிவின்பால் கொண்ட காதலெல்லாம் இச்செயலற்ற பதவியைப் பெறவே. முன்னுளில் யோகிகளும் சாதுக்களும் மேற்கொண்ட தெய்வநெறிபற்றிய தூய்மைச் செயல்களெல்லாம், இப்பெருநிலையை எய்துவதற்கான முயற்சியே, காண். செயலின் தத்துவம் செயலற்ற நிலையிற்றுன் இருக்கின்றது.

எர்னஸ்ட்:— (வியப்புடன்) இன்னதற்குத்தானு பிறந்ததெல்லாம் நாம்! செயலற்றுச் சும்மா விருப்பதோ பிறவியின் பேறு!

கில்பர்ட்:—ஒன்றுமே செய்யாதிருப்பதற்கே அறிவுடைய பெரியோர் பிறந்தனர். அன்னவரே வாழ்கின்றனர். செயல் என்பது என்ன? எல்லைக்குட்பட்டதும் ஒன்றனுடன் தொடர்பிலாது தானேயாய் நிற்க இயலாததுமான சிறு செய்தி அது. பிரபஞ்ச மடங்கலும் வியாபிக்கும் பெற்றியை அதுஉற்றதில்லை. அக்காரணத்தால் செயலொன்றும் நிறைவெய்துகின்றதில்லை. தானே தனியமர்ந்து சிருஷ்டியைச் சிந்திக்குங்கால், இதுகனவோ, நினைவுதானோ என்றும் தெரியாது மோனத்தில் இருப்பவனே பூரணமடைந்த மனிதனுகின்றுன் ............

'இதுதான் உண்மையின் வாழ்க்கை. சுதந்திரம் என்றும் சுகம்என்றும் நாம் வெளியுலகைப்பற்றிச் செய்யும் வினையெல்லாம் தளையாய் அமைவதல்லால் விடுதலையைத் தந்ததாகத் தெரியவில்லை. இனியாவது உள்ளுலகில் (Subjective world) நாம் நாட்டத்தை ஏன் செலுத்துதல் கூடாது. உள்ளத்தின் (Mind) விகசிதமான கலையினிடம் ஆராய்ச்சியெனும் அறிவு கொண்டு நாம் சேருங்காலை, உள்ளுலக சஞ்சாரம் நமக்கு ஏற்படுகின்றது. உள்ளத்தின் தொடர்பு வளர வளரக் கடைசியாய் அது நம்மைச் செயலற்றுச் சும்மாவிருக்கும் உயர்நிலையில் கொண்டுபோய்ச் சேர்த்தல் கூடும்............

அன்ப, சாத்தியமானகாரியத்தைச் சாமர்த்தியமாகச் செய்துமுடிக்கும் மனிதரால் (Practical Men) இவ்வுலகம் செம்மையுருது. மனப்பால் குடிப்பவன் மாற்றம் என்று நான் சொல்வதைப் பலர் கூறலாம். மனப்பால் குடிப்பவரே நமக்கு வேண்டும். இங்கிலாந்து மேன்மையுற வேண்டுமெனின் மனப்பால் குடிக்கும் மனிதரே மலியவேண்டும்............

சொல்வதுபோல் செய்யவேண்டுமெனும் அபவாதம் ஒன்று எங்கும் பரவிவருகின்றது. கருத்தைச் செயலொடு கலத்தலாலேயே கருத்தை நாம் மடியவைக்கின்றோம்.

செயலின் ஆதிக்கம் இந்நூற்றுண்டில் வலுத்துள்ளதால், புத்தியை மாந்தர் இழந்துவிட்டனர். இத்தகையாருக்கு வாழ்க்கையை எப்படி அறிதல்கூடும். வாழ்க்கையைப்பற்றி எதுவும் தெரியாது போவதற்கு வழி பிறருக்கு உபயோகமாக இருக்கின்றவைகளைச் செய்யும் முயற்சியே...........

நாம் உய்யவேண்டுமெனின், உள்ளத்திலிருந்து விளைந்த கலையும், அக்கலையின் திறம் நுனிக்கும் அறிவும் நம்மிடைவளரவேண்டும். இத்தருவாயில் பிளோட்டோ என்பவன் கிரேக்கஇளைஞர் கல்வியைப்பற்றிக்கூறிய வாசகத்தை உனக்கு ஞாபகமூட்டுகிறேன். "இளையவர்கல்விபயிலும்காலையில், நல்ல காட்சியிலும் நல்ல இசையிலும் அவர் ஓயாது பழகுவதற்கான வசதிவேண்டும். அப்பொழுதுதான் அழகு அவரது உள்ளத்தில் வேர்விட்டு வளரும்'' என்று அவர் கூறினார். உண்மையான கல்வியின் நோக்கம் இப்பயிற்சி தருதலே. இவ்வகையதான பயிற்சியால் சிறுவர் மனத்தை நாம் வளர்த்துவைப்போமாயின் அழகின் அனுபவம் பெற்ற அவர் வாழ்வை அறிந்து வாழ்ந்திடுவர். ......

மற்றொரு வினவிற்கு விடையாகக் கில்பர்ட் கூறுவான்:—இனி நாம் ஆயும் திறனை வளர்க்கவேண்டும். கலைவளர வேண்டுமெனின், ஆராய்ச்சி வளரவேண்டும். சென்ற பாதையிலேயே செல்கின்ற சிருஷ்டி சுவைக்காது. சிருஷ்டிக்குப் புதியபுதிய பாதையைக் காட்டுவதற்கு ஆராய்ச்சி அவசியம். சிருஷ்டிக்கு புதியவழியைக் காட்டும் தன்மையால் ஆராய்ச்சி சிருஷ்டியினும் சிறந்தது.

இவ்வாறு பொருள்படும் பலவற்றைக் கில்பர்ட் கூறிவருகையில் பொழுதும் விடிந்தது. கருத்துலகில் ஓரிரவு திரிந்ததினுல் சோர்வுற்ற மனத்திற்கு ஓய்வு தர நண்பனை அழைத்துக்கொண்டு பூங்காவினிடை சென்றுன் அவன்.

(முற்றிற்று)

# குலசேகரர்.

## பேயாழ்வார்.

554 பக்கத் தொடர்ச்சி

திருமாலைவழிபட்டு உயர்நிலையெய்திய அடியார்களில் பேயாழ்வாரும் ஒருவர். அப்பெரியார், ஆண்டவன்பால்அழுத்தமான அன்புடையாராகித் திருமாலிடத்தே பெருவெறிகொண் டலைந்ததுகண்டு தெருவாழ் சிறுவரும் பெரும்பேயெனப்பின்னே ஓடி நகையாடினர். அஃதே அவருக்கோர் அருமைத் திருப்பெய ராயது. இறைவ னடியார்க்கு இகழ்ச்சியும் புகழ்ச்சியே யன்றோ அங்ஙனமே சிவபெருமானை வழிபட்டாரிலும் காரைக்கா லம்மையாரும் பேயெனத்திரிந்துபெருமானிடத்தேபெற்றதாயென பேரன்புபூண்டொழிகிக் காரைக்காற்பேய் என்றுகண்டவர் சிரிக்க வாழ்ந்தனர். உலகினரோ பொருள்களின் உண்மைவிலை யறியாத சின்னஞ்சிறு குழவிகள். காக்கைப் பொன்னையும் கைப்பொருளெல்லாம் கொடுத்து வாங்கும் பேதையரே யாவர். காற்றின்விலை யறியாது கண்ணிழந்த மாந்தரைத் தேற்றித் தெளிவித்தல் தெய்வப்புலவர்க்கும் அரிதாகும். குழவிகள் எங்ஙனம் மினுக்கும் பகட்டுமாய் உள்ளவற்றை விரும்பலைகின்றனவோ, அங்ஙனமேதான் உலகினரும் பய

தராப் பொருள்களையே நாடி அழிவர். உண்மை விலையினை அறிந்தவரே மெய்யுணர்ந்தோர் ஆவர்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

மெய்யுணர்ந்தோர் உடல்வலி கண்டு உள்ளம்சிதையார்; செல்வப் பொலிவுகண்டு திகைத்து நில்லார்; அரசன் படைகண்டு அஞ்சி நடுங்கார்; மாதர்க்கு மயங்கி மையல்வலை சிக்கார்; உடையே உடலம், உணவே உயிர், என நினைந்து உண்மையுடலையும் உயிரையும் மறவார். நிலையற்றவற்றை நிலையென்றுணரும் புல்லறிவாண்மை அவர்களிடம் இல்லை. அன்பே அவர்கள் வழிபடும் கடவுள். காக்கைப் பொன்னிற்கும் கடவுள் பொன்னிற்கும் வேற்றுமை யறிவர்.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நடலையில்லோம் நரகத்தி லிடர்ப்படோம்
ஏமாப்போம் பிணியறியோம் இன்பமே
எந்நாளுந் துன்பமில்லை

என்று பாடுவர். அவர்களுடைய அருள்வளர் கண்ணிற்கு உலகத்தினர் உழைப்பெல்லாம் இளங்குழவியின் பொருளிலாத் தொழில்போன்றே புலனாகின்றது. உலகத்தைப் பேயுலகம் எனப்பேசிப் பிரிந்து நிற்பர். கண்ணன் கூறுகிறபடி "உலகினர் விழித்திருக்கும் நிலையில் மெய்யுணர்ந்தவன் உறங்குகின்றான்; அவர்கள் உறங்குநிலையில் இவன் விழித்திருக்கின்றான்''. உலகின் விழிப்புநிலை உலகியலாகும்; உலகின் உறக்கநிலை மெய்யுணர்வே யாகும். இதுகண்ட மாக்கள் இதன் உட்பொருள் அறியாது பெரியோரைப் பேயர் எனப் பேசிக்கொள்வார். ஆனால் உண்மையுணர்ந்தவர்கள், 'பித்தன்' 'பேயன்' என்பவற்றிற்கு மெய்யுணர்ந்தோன் என்றே பொருள்கொள்வர். இதுபற்றியன்றோ இறைவனும் தன்னைப் "பித்தா'' என்றே பாடத்தொடங்குமாறு ஆளுடையநம்பிக்கு அருள் செய்தார்.

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

என்ற குறளில் உலகம் என்பது உயர்ந்தோரையே குறிக்கின்றது. அதனை அறியாத கீழ்மாக்கள் தம் கொள்கைக்கும் நடைக்கும் மாறுபட்டவரை, வாய் கூசாது பேயெனப் பேசி இகழ்வர். உண்மையை நோக்குமிடத்து, உலகத்தார் எனச் சிறப்பிக்கப்பெற்ற உயர்ந்தோராகிய அன்பர்கள் உண்டென உணர்ந்த ஆண்டவன் அன்பினை இல்லையென்றும், இவ்வுலக இன்பமே எந்நாளும் உள்ளதென்றும், நாயெனத் தேடியலைந்து தெருவோடும் மாக்களே பேயிற் பெரிய பேய்களாம்.

குலசேகரரும் தம்மைத்தாமே பேயர் எனக் கூறிக்கொள்கின்றார். அவரும் ஒரு பேயாழ்வாரே. பெரியோர்கள், தம்மை உலகம் பேயெனப் பேசி இகழ்ந்தபோதுதான் பெருமைபெற்றவர் எனக் கருதுகின்றனர்.

தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே யாகி நல்லிடையறு வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுலமாய் மெய்வி திர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி

என்று உலகினர், பேய்நிலை என உளறும் ஒப்பற்ற உயர்நிலையை உணர்ந்தவா ஓதுவது காண்க. அன்புநிலையை இவ்வாறே குலசேகரரும் முகுந்தமாலையில் ஓதுவதைப் பின் காண்போம். காரைக்காலம்மையாரும் தம்மைப் பேயெனப் பாடிக்கொள்வதில் பெருவிருப்புடையராகி, "காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்காற் பேய்'' என்றும் "செடிதலைக் காரைக் காற்பேய்'' என்றும் "பேயாய் நற்கணத்தி லொன்றாய நாம்'' என்றும் பாடுவது காண்க. குலசேகரரும் "பேயனாய் ஒழிந்தேன் பித்தனாய் ஒழிந்தேன்'' எனப் பாடுகின்றார். உலகத் துறுதிப்பொருளைக் கடைப்பிடியாத மாக்கள் நின்றநிலையினும் தமதுநிலை மாறுபட்டதென நன்கு எடுத்தோதுகின்றார். "பேயரே எனக்கு யாவரும், யானும் ஓர் பேயனே எவர்க்கும்'' என முடிக்கின்றார்.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

என்ற உண்மையைத் தம்மளவில் விளக்குகின்றார். ஆனால், இவர் கூறும் துறவோ இயற்கைத் துறவேயாகும். உலகனைத்தும் ஒக்காளம் என்று உளறுவார் இவர் அல்லர். உலகத்தே உயர்நிலையினையும் கண்டறிந்தவர்; இழிநிலையையும் எண்ணி யுணர்ந்தவர். பின்னதன் இழிவினையே பெரியோர் பேசுவர். ஒன்றினையும் பற்றாது உலகினை இகழ்பவர் உள்ளத்தியல்பினை உணராதவரே யாவர். உள்ளமானது சிறிதேனும் தேங்கிநிற்பதின்றி அருவிபோல ஒருகல்நின்றின்னொரு கல்லில் தாவித்தாவி ஓடிக்கொண்டேயிருக்கும். பற்றிலாது யிடையீடின்றி விழுவது அருமையினும் அருமை. உடையினை யொழியென்றால் உணவினைப்பற்றும். உணவினை யொழியென்றால் உடலினைப் பற்றும்; உடலை மறவென்றால் உயிரை நினைக்கும்; உள்ளம் ஊன்றிநிற்கும் கைத்தடியைப் பிடுங்கி எறிய வேண்டுமானால், அதற்கு மற்றொரு ஊன்றுகோல் உதவவேண்டும். உலகை மறவென்றால் உள்ளம் அதனை



மறத்தல் எந்நாளும் இல்லை. உடனேயே, 'உயர்ந்தோனை நினை' என ஓர் ஊன்றுகோல் அளித்தல் வேண்டும். உள்ளத்திற்கு மற்றுமோர் இயல்பும் உண்டு. அஃது உறங்கி ஓய்ந்த தன்மையது. எதையேனும் "செய்யாதே'எனக் கேட்டதும் "ஏன்'' என விழித்தெழுகின்றது; "செய்துதான் பார்ப்போமே'' எனச் சிரிக்கின்றது. "அறிவுமரத்தின் அருங்கனியை அருந்தாதே'' என்று ஆண்டவன் வரையறுத்து அருள்செய்யாமற் போயிருந்தால் அந்தப் பழத்தை ஆதாம் என்ற முதலான மகனும் அருந்தியிரான்; ஏவாள் என்ற முதற் பெண்மகளும் பேயின் அடிமையாகியிராள்; இறப்பே உலகில் இல்லையாய் இருக்கும். நமது சிறுவர்களின் இயல்பையே நோக்கினால் இவ்வுண்மை புலனாம். முகிலினம் குடிபுகுந்த முடிபோடிலங்கும் குன்றுநின்றும் குதித்தோடி வருகின்ற அருவியால் தாக்குண்டு அடியோடும் பிளந்த இருங்குவடிரண்டி னிடையே தூங்கும் தேனடை மூங்கிலால் கிழியவே, அத் தேன்வெள்ளமானது மலைமீது தவழ்கின்ற மழையினது குளிர்ச்சியோடே, உபரநின் றிழியவிட் டமைத்த நூலேணி ஒன்றுபோல் மெல்லியதாய் இறங்கித் தெளிந்து ஒழுகுகின்றது. கன்றீன்ற ஆவினம் கானகத்திலே தமது கன்றினை நினைந்து கனைப்பச் சோர்கின்ற பால்படிந்து பெருந்திரளாயினபோது அவ்வாறு ஒழுகுமத் தெவிட்டாத செந்தேனிலே சுவைபடத் தோய்ந்துதோய்ந்து உள்ளூற இனிதாகிப் பனிக்கட்டிபோலக் குளிர்ச்சியுடையதாகின்றது. பாணணாது பண்ணிறைந்த பாக்களைபோன்றதாய அப்பனிக்கும் பழந்தீஞ்சுவைதான் அன்பிற்கரைந்து உயிரின்பமாய்க் கனிந்த பழமாகின்றது. என்னவே இத்தேனும் பாலும் பாயுமிடத்தே தாளுண்ட நீரைத் தலையாலே தந்துதவும் மாமரம் வளர்ந்துநின்று நனி பழுக்கின்றது. இப்பழம், தடவுதற்கும் உடல்கூசும் தகையுடைய நல்லாரது மெல்லிய தாடைபோல வழவழ என மனம் வழுக்கி வீழுமாறு பொலியும் ஒரு பொன் முட்டையைத் தீம்பொழிலகத்தே ஒரு தேமா மரம் தனது பாசடைநடுவே இட்டதுபோலத் திகழ்ந்து, சிறிது மறைந்தும் பெரிது வெளித்தோன்றியும் கண்டவர் மனதோடு ஊசலாடுகின்றது. கிளையில் குந்திப் பாடும் கிளியின் சிறகச் சிவந்த மூக்கொன்றையும் தான் கொள்ளைகொண்டதன் பயனாய்ப் பல ஆவின் நெய் மணமும் பலபூவின் தேன்மணமும் தென்றலில் குழைந்து ஒன்றாகிக் குளிர்மணமாக மாறிவருவதொன்றைத் தன் மணமெனத் தேர்ந்தெடுத்து அந்நறுநாற்றத்தையே மக்கள் மனங்கவர் வலையாக வீசுகின்றது. கண்கவர் வனப்பினால் கண்டவர் மனத்தில் காதலை எழுப்பிக் கல்லைப் பிசைந்து கனிவிக்கின்றது. நாற்புறத்தின் நின்றாரும் நாவினீறூற நாக்கினைத் தட்டிக்கொண்டே எதிரில் ஓடிவருமாறு இன்பத்தை எங்கும் பொழிகின்றது. பாசடை நடுவே காற்றிலப் பழம் அசைவதும் கனிந்ததொரு பாட்டாகி, அதைக் கண்டாரையும் அதனை முன் உண்டாரையும், பண்ணுலகில் புகுவிக்கின்றது. உண்டாலுமழியாது பெருகி வளர்கின்ற உண்மை யமுதாகி ஒளிர்கின்றது இத்தகைய தேமாங்கனி ஒன்றினை அன்போடும் தேடிக்கொண்டுவந்து தந்தையார் தமது செல்வப்பிள்ளைகளுக்கு அளிக்கின்றார். ஆனால் அதனை ஒருகடி கடித்துறிஞ்சி அப்புறத்தே வீசி எறிகின்றனர். அவ்வினிப்பெல்லாம் அவர்கள் உணரவில்லை. பின்னர்க் காவல் நிறைந்ததும் மந்திரிகள் அறியா மரங்கள் பயின்றதுமான அடர்ந்திருண்ட பொழிலுள்ளே [illegible] காவலாளரும் இல்லாத அற்றம்பார்த்து மெல்ல நுழைகின்றனர். வேலியில் ஒருவனையும் மரத்தின் கீழ் ஒருவனையும் வரும்வழியில் ஒருவனையும் காவல் வைத்து முள்ளம் புதரினிடையே வளர்ந்த முள் சுற்றியுள்ள ஒரு மரத்தின்மேல் உடல்கிழியக் கால் கிழியக் கைகிழிய அவர் உள்ளந்தான் கிழியாதேறுகின்றனர். காயுங்கையுமாகக் கீழ்வீழ்ந்து அடிப்பட்டுச் சுறுக்கேறி நிற்கின்றபோது காவலாளி வருவதைக் கண்டு காயை வாயிற் கௌவிக்கொண்டே காற்றென ஓடி, ஊடே ஓடும் ஓடையில் குளிக்கின்றனர். ஊறு காய்க்கும் உதவாத அக்காய் வெந்நீர்போல் வெம்மை வெகுட்டுதலால் பல்லெலாம் புளிக்கின்றது கண்டு புன்சிரிப்புக் கொள்கின்றனர். முகத்தைக் கோண வைத்து முழுதின்பம் பெறுகின்றனர். காயெல்லாம் கொட்டையே; மேலெலாம் பால் வீச்சமே. இதனையுண்டு இன்பஉலகிற் புகுகின்றனர். இஃது எதனாலாயது; வேண்டாம் என்ற மாங்காய் மிக இனிக்கின்றது. 'உண்' என உதவிய ஒப்பிலா மாங்கனி ஒக்காளமாகின்றது. எதிர் மறையை எதிர்ப்பதே எல்லார் உள்ளத்திற்கு மியல்பாகும். செய்யாதே என்பதினும் செய்என்பதே சிறந்த கட்டளையாம். அங்ஙனமே பலரோடும் கூடாதே, என்பதினும் பண்ணவனோடும் கூடுக என்பது பயனுடையதாகின்றது. கடவுளையே எண்ணி நிற்பவர் உலகை எண்ணிக் கருத்தழிவதில்லை. நிறைந்ததொரு கொள்கலம் வேறொன்றற்கும் இடங்கொடுப்பதில்லை. கடவுளே நிறைந்த மனமுடையார் தம்மனத்தே வேறெதனைப் புகுத்துதவுதல்கூடும். "ஆழஅமுக்கினும் ஆழ்கடனீர் நாழிமுகவாது நானாழி''; அங்ஙனமே ஆழ்வாரும் "அரங்கனுக்குப்பித்தனாயினேன். அந்நிலையில் உலகம் இருக்க அங்கு இடமில்லை, ஆதலின் உலகத்தோடு கூடுவது ஒழிந்தேன்'' என்ற இயற்கைத் துறவுமுறையை மிக அழகாக எடுத்துப் பேசுகின்றார்.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்றன்றோ வள்ளுவரும் கூறுகின்றார்.

குருபரம்பரையானது குலசேகரர்உலகைத்துறந்து சென்ற ஒரு கதையினையும் கூறுகின்றதன்றோ. அதனை இப்பகுதி வற்புறுத்துகின்றது. "பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேன்'' என்ற கொள்கையைவைத்து மேலேபாடியவர் பித்தரென்றே பிறர்கூற "எண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாம் இனியவாறே'' என்று பாடுவது இயல்பாகின்றது.

K.C.R. 700
23-7-

## மாறன் பாப் பாவினர்.

[ 548-வது பக்கத் தொடர்ச்சி ]

### பரிபாடல்

தரவு.

வேல் விழியென வினை கூர்த்த
வாலெயிற் றினமணி வாழொழுங் கினவே
கன்னலின் குழும்புங் களிகூர் யாழுஞ்
சொன்னலந் தனைவளர் வண்ணம் வாய்ந்தனவே
கனிது கிரிலவ தாகுந் தோகாய்
தனியிதழ் குழற்கற்றை கார்தோய்ந் தனவே
மாரன் வன்போர்க் குரியகைச் சிலைபார்
வேலிணை வளைந்து திரண்டேர் செய
சால்பினில் வார்கரும் புருவந் தோன்றினவே
வாணுதற் சந்தமும் வளர்பிறை மாண்பின்
பூணுறு நோக்கிற் கொருபொரு ளன்றே
மறுத்துடைத் தொளிர்முழு மதிபே திருமுக
முறப்பமை துணைமுலை யுடையபொற் குன்றே
வள்ளைத் தண்டே வார்கா திணையு
மொள்வளை யெனலா மொளிவளர் மிடறே
கதிர்வளை செறியுங் காமர் கைத்துணைக்
கெதிர்பிறி தின்றுற் காந்த ளிணையே
சதிருடை யெனனிறை தாயபொற் கொடிக்கே.

இது, பதினெட்டடியாய் முதலடி முதற்சீர் சொற்சீராய் வந்த தரவு.

அஞ்சு.

கங்கையின் சுழியினைக் கவின்பயி லுந்தியோ
டிங்கிணை யென்பது மிறந்ததொ டொன்றே.
இடங்கொள முலைசுமந் திடுகு நுண்ணிடை
படங்கொ ளரவெனப் புகழ்வது பழியே.
பாந்தளின் படமெனப் பழிப்பன பழித்துபின்
ஞப்ந்தெழி லல்குலுக் கமைப்பது மதுவே.
கொழுங்குளிர் வாழைத் தண்டெனக் குறங்கினை
யொழுங்குற வுரைப்பது முவமைபற் றன்றே.
தமனியத் திருமக டவிசெனச் சிறத்தலி
னமர்தரு நளினமு மடிங்கின்மெல் லடிக்கே.

இவை யஞ்சு மீரடி யஞ்சு.

எனவாங்கு, (தனிச்சொல்)

சுரிதகம்.

இன்னன மவயவ மியைந்துள வவட்கே
தென்னரங் கேசன் சிலம்பினோர் பொலங்கொடி
மன்னிய லொடுவரு மாமெனிற்
சொன்னிலத் தினையெனத் துணியுமென் மனனே.

இது; நான்கடியாய் நேரிசை யாசிரியப்பாவினு லிற்ற சுரிதகம். இதனுள், கொச்சகவுறுப்பும், அராகமும் வந்தில. சங்கப் பரிபாடலுள், "கார்மலி கதழ்பெய றலையேற்ற, நீர்மலி நிறைசுனை பூமலர்ந் தனவே, தண்ணுறுங் கடம்பின் கமழ்தா தூதும், வண்ண" என்னும் பதினூலாம் பாட்டின் னடையவாய் அமைந்தன. இது, பகுதி - சேட்படை. துறை - அவயவங்கூறல். முன்னிலை - தோழி தலைவன் கூற்று. (3)

# அப்பர்

## 5. அப்பர் கவித்திறம்.

### 1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

[ 545 வது பக்கத் தொடர்ச்சி ]

II மதுரம்.

மதுரகவி,

"சொல்லும் பொருளுஞ் சுவைபட நிறீஇச்
செல்வுழித் தொடையும் விகற்பமுஞ் செறீஇ
யுள்ளத் துள்ளே கொள்ளு மமுதென' பாடுதல்

என்பர். அடிகள் அளவுசிறுத்தும் அதனுள் ரசம் பெருத்தும், உள்ளே சிறிது சென்றாலும் பலன் பெரியதாய்த் தேவாமிர்தமெனக் கொள்ளத்தக்கது மதுரகவியாம். திருநாவுக்கரசுநாயனர் பாடிய 5-ம் திருமுறையாகிய திருக்குறுந்தொகைப்பதிகம் 102-ம் மதுரகவிக்கு உதாரணமாகும். மதுரகவியின் குணங்கள்சில உரையிற்கோடல் பொருந்தும். அவையாவன நாவினில் அமுதூறல், பாவினில் இன்னிசைதிகழல், ஆண்டான் அடிமையிடை யன்பின் நன்மைகள் விளக்கல், நீறுபோன்ற நெருப்பா யிருந்து புன்மையாய்க் கருதப்படினும் நன்மையால் மிகல், உலகப்பற்றற்று நிற்றல், அருள் வாய்ந்திருத்தல், ஒண்டமிழா யருள் பெறல், விழுமிய வேதப்பொருளைப் பாடல், இவை யாவற்றிற்கும் நோக்காம் ஜீவன்முத்திபெறல் முதலியன மதுரகவியில் கிளர்ந்து விளங்கும்:—

ஒலி வண்டறை யொண்மல ரெட்டினுற்
காலை யேத்த வினையைக் கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி லக்கரை
வேலி சூழ்ந்தழ காயவீ ரட்டரே !

திருவதிகை வீரட்டம்-திருக்குறுந்தொகை 8.

இதில் சொல்லும் பொருளும் சுவைபட நிறுவியுள்ளனவோ என்று சிறிது ஆராய்வோம். வண்டுகள் ஒலிப்பதற்குக் காரணம் மலர்களின் கள்ளை யுண்பதற்கேயாம். "காலை யேத்தல்" என்பது பொழுதை மாத்திரம் குறிக்காது, சதா உள்ளத்தில் எண்ணிய எண்ணம் காலையெழுந்தவுடன் நிறைவேற்றுவதுபோலாம். வினையைக் கழிப்பர் என்றது "திரைகள்போல் வரு வல்வினை தீர்ப்பர்" என்பதாம். "அழகாய வீரட்டர்" என்றது வெள்ளை நீறணி மேனியாய் விளங்குவதால். இப்பதிகத்திலுள்ள பாசுரங்களில் மற்றொன்று பொழிப்புரை எனவும் கொள்ளலாகும். கீழ்வருஞ் செய்யுளை நோக்குக:—

கள்ளி னுண்மல ரோரிரு நான்குகொண்
டுள்கு வாரவர் வல்வினை யோட்டுவார்



189064

தெள்ளு நீர்வபல் பாய்கெடி லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ ரட்டரே —ஷ்டி 3.

ஒருவிஷயமே இப்பதிகத்திலுள்ள பத்துப் பாசுரங்களிலும் காணப்படும். ஆயினும்கூறியது கூறல்வராது விகற்பத்தொடைகள் நூதனவிஷயமே புதியதாய் ஒவ்வொன்றிலும் தோன்றச் செய்கின்றன. "அட்ட புட்பமவை கொளுமாறுகொண்டு அதிகை வீரட்டனார் அடி தொழுவோர்" பயன் வல்வினை தீர்த்தலென்னும் விஷயத்தைப் பத்து விதமாய்ப் பாடியபோது, பத்துவிஷயங்களையும் ஒரேவிதமாய் ("அம்மவழலிதே" என்று) அப்பர் திருநாரையூர்த்திருக்குறந்தொகையிற் காட்டுவதை நோக்குக.

ஐந்தாம் திருமுறையிற் காணப்படும் பதிகங்கள் பாவும் ஓரே விதமான செய்யுளாயினும் ஓசை மந்தப்படவில்லை. அதன் காரணம் அப்பர் சொற்றொடர்களின் வன்மையும், அவர் திருக்குறுந்தொகைப் பதிக யாப்புமாம். இவற்றுள் முன்னதை யாராய்ந்து விளக்குவாரில்லை. ஆயினும் பின்னதை நமதிலக்கணவாயிலாய்க் காண்போம்:—

(1) இக் கலிவிருத்தம் ஒருவகைக் கட்டளையுள் அடங்கும் கலிவிருத்தமாகும். ஒரு அடியின் முதலசை நிரையசையாயின், அவ்வடியிலுள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரண்டாம். நேரசை முதலசையாயின் அந்த அடியிலுள்ள உயிரெழுத்துக்கள் (அதாவது உயிர்மெய் யெழுத்துக்கள்) பதினொன்றேயாம்:—

பிணிகொள் வார்குழற் பேதையர் காதலாற்
பணிகண் மேவிப் பயனில்லை பாவிகாள்
அணுக வேண்டி லரனெறி யாவது
நணுகு நாத னகர்திரு நல்லமே (3)

தமக்கு நல்லது தம்முயிர் போயினல்
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் றானுறை யும்பதி
நமக்கு நல்லது நல்ல மடைவதே (4)

திருநல்லம் - திருக்குறுந்தொகை.

(2) இக் கலிவிருத்த வடிகளின் சீர்கள் பெரும்பாலும் இயற்சீர்களா யிருப்பதால், ஆசிரியப்பாக்களுக்குரிய தளைகளையே அவைபெரும்பாலும் பெற்று விளங்கும்.

(3) மெய்யெழுத்துக்கள் ஒவ்வொரு அடியிலும் எத்துணையேனு மிருக்கலாம்; அல்லது மெய்யெழுத்து ஒன்றேனுமிராம லிருக்கலாம். ஆதலால் இத்தகைய பாசுரங்களில் ஒரு அடி மிகவும் நீளமாயும், ஓரடி மிகவுங்குறுகியிருப்பதுபோலும் காணப்படினும், மொத்த சங்கையில் உயிரெழுத்து இலக்கம் முன்கண்டவாறு பன்னிரண்டு அல்லது பதினொன்றும். யாதொரு மெய்யு மிலாத வடிக்கு உதாரணம்:—

மாலு மாமல ரானொடு மாமறை

இவ்வாறு யாப்பு அமைதலால் சந்தத்திற்கு ஒப்ப இசையெழும், ஆயினும் இவ்விருத்தங்கள் சந்த விருத்தங்களல்ல. சந்தவிருத்தங்கள் தமிழிலக்கியத்திற் புகுதற்கு முன்னரே இவை ஆசிரியப்பா விலக்கணம் தழுவி வந்தமையாலும் செவிக்கு இனிமை பயத்தலானும் மதுரகவி யென்பர். அப்பர் திருக்குறுந்தொகை மாத்திரமன்று; அவர் பாடிய மற்றைய திருமுறைகளிலுள்ள பதிகங்கள் யாவும் மதுரகவியே. காதில் இனிய வோசை கொடாவிடின், அப்பர் பதிகமெனக் கொண்டுள்ளன சில வெள்ளிப்பாட்டென்றே அநுமானிக்கலாம். அப்பர் பதிகங்கள் என்பனவற்றில் எவ்வெவை வெள்ளிப்பாட்டென்பது பின்வரும் படலங்களிற் காண்க.

இனி அப்பரைச் சித்திரகவி யென்னும் வகுப்பிற்கொள்ளலாகுமோ வென்பதை யாராய்வோம்.

## தமிழ்ப் பாடம் 81.

### [ அஷ்ட பிரபந்தம். ]

[ 552வது பக்கத் தொடர்ச்சி ]

#### திருவேங்கடமாலை

திங்களிறு மாந்துலவத் தீம்பாற் கவளமென்று
வெங்களிறு கைநீட்டும் வேங்கடமே—பொங்கமரி
லார்த்த வலம்புரியா ராட்பட்டார் செய்தபிழை
பார்த்த வலம்புரியார் பற்று. 8

பதப்பிரிவு:—திங்கள் இறுமாந்து உலவ தீம் பால் கவளம் என்று வெம் களிறு கை நீட்டும் வேங்கடமே பொங்கு அமரில் ஆர்த்த வலம்புரியார் ஆள்பட்டார் செய்த பிழை பார்த்து அவலம் புரியார் பற்று.

பதவுரை:—திங்கள் - சந்திரனனது, இறுமாந்து - செருக்குடன், உலவு -(ஆகாயத்தில்) திரிய, (அதனை) வெம் - கொடிய, களிறு- யானையானது, தீம் -இனிய, பால் கவளம் - பால்சோற்றின் கவளம், என்று - என்று எண்ணி, (பற்றி உண்பதற்கு) கை - தனது துதிக்கையை, நீட்டும் - நீட்டுகின்ற, வேங்கடமே - வேங்கடமலைதான்,

பொங்கு - மிகுகின்ற, அமரில் - பாரதப் போரில், ஆர்த்த - சப்தித்த, வலம்புரியார் - வலம்புரிச்சங்கையுடையவரும், ஆள்பட்டார் - (பக்தியினுல் தனக்கு) ஆளானவர்கள், செய்த - செய்த, பிழை - குற்றங்களை, பார்த்து- கவனித்து, (அவர்களுக்கு) அவலம் - துன்பத்தை, புரியார் - செய்யாதவருமான திருமால்,

பற்று - சேர்ந்திருக்கும் மலை.

விரிவுரை:—இத்தூரத்தில் இருக்கின்ற தனக்கு ஏது பயம் என்று எண்ணி ஆகாயத்தில் சஞ்சரித்த சந்திரன் திருவேங்கட மலையருகு வந்தவுடன் அம்மலையிலிருந்த யானை அதனைப் பிடிப்பதற்குக் கையை நீட்டலாயிற்று. எட்டிப் பிடித்துவிடலாம் இச்சந்திரனை என்று யானை எண்ணியதிலிருந்து அம்மலையின் உயர்ச்சி தெரியவருகின்றது. மலையின்மேல் இருந்த யானைக்கும் ஆகாயத்தில் இருந்த சந்திரனுக்கும் உண்மையில் ஒருவித தொடர்பும் இல்லாதிருந்தும், கவி தன்னுடைய சாமர்த்தியத்தினல் இந்த யானை அந்தச் சந்திரனைப் பிடிக்கக் கை நீட்டியதென்று ஓர் தொடர்பு கற்பித்து, அதன் மூலமாய் அம்மலையின் உயரத்தைப் பெரிதும் பாராட்டுவதால் இது தொடர்புயர்வுநவிற்சி யணி.

இதனில் மயக்க அணியுங் கலந்திருக்கின்றது. ஒரு பொருளை வேறொரு பொருளென எண்ணி விவகரிப்பது இவ்வணிக்கு இலக்கணம். "மங்கையொருத்தி மலர் கொய்வாள்......" என்று தொடங்குகின்ற நள வெண்பாச் செய்யுளும், "பொன்னுடைய வாசப் பொகுட்டு..." என்ற செய்யுளும் இவ்வணிக்கு நல்ல உதாரணங்கள். இதனைமுன் (வால்யூம் 1.பக்கம் 547) விளக்கிக் காட்டியிருக்கின்றோம். இவ்விடத்தில் யானையானது சந்திரனைப் பார்த்துப் பாற்கவளம் என்று மயங்கி, அதனைப்பிடித்து உண்பதற்குக் கைநீட்டியது என்று சொல்லுமிது மயக்க அணியாம். இம்மயக்கத்தை முன்னிட்டு அவ்வுயர்வுநவிற்சியும் ஏற்படலாயிற்று. மயக்க அணியை வடமொழியில் பிராந்திமதாலங்காரம் என்பர்.

திருமால் தன்னுடைய அடியார்கள்மேல் வைக்கின்ற அன்பின்மிகுதியால் அவ்வடியார் பிழையிழைத்தாலும் பராமுகமாகவே இருப்பானேயன்றி அதைப் பார்த்துத் தண்டிக்கமாட்டான் என்பது இங்குக் கூறப்பட்டுள்ளது. "உன் அடியார் இப்பிழை செய்தார் காண்' என்று யாரேனும் வந்து கோள்கூறினாலும், அக்கருணையங் கடவுள் "என் அடியார் அது செய்யார். செய்தாரானாலும் அது நல்லதாகவே இருக்கும்" என்றுரைப்பானென அவன் நற்குணக் கடலில் ஆடியுள்ள பெரியோர் கூறியிருக்கின்றனர்.

குறிப்பு:—இச் செய்யுளில், உலவ+தீம் என்னும் சொற்கள் தொடர்கையில் நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் உள்ள எழுத்துக்கள் புணரும்போது த் என்னும் ஓர் எழுத்துத் தோன்றியதால் இப்புணர்ச்சி விகாரப்புணர்ச்சியாகும். அது பெற்ற விகாரம் தோன்றல்விகாரம்.

பால்+கவளம், என்று புணர்கையில், நிலைமொழியிறுதியிலுள்ள ல் என்னும் எழுத்து ற் என்னும் எழுத்தாகத்திரிந்தது, திரிதல்விகாரம். வெம்+களிறு வெங்களிறு, என, மகரமெய் ஙகரமெய்யாகத் திரிந்ததும் திரிதல்விகாரம்.

வன்குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு
மென்குறிஞ்சித் தேன்மாறும் வேங்கடமே—நன்
[குறிஞ்சிப்
பேய்த்தநஞ்சு வைத்தார் பிறர்க்கமுதீந் தீசனுக்கு
வாய்த்தநஞ்சு வைத்தார் வரை. 9

பதப்பிரிவு:—வல் குறிஞ்சி மாதர்பால் வானோர் மருந்துக்கு மெல் குறிஞ்சி தேன் மாறும் வேங்கடமே நன்குஉறிஞ்சி பேய் தனம் சுவைத்தார் பிறர்க்கு அமுது ஈந்து ஈசனுக்கு வாய்த்த நஞ்சு வைத்தார் வரை.

பதவுரை:—வல் - வலிய, குறிஞ்சி - குறிஞ்சிநிலத்தில் வாழ்கின்ற, மாதர்பால் - குறப்பெண்களிடத்தில், வானோர் - தேவர்கள், மருந்துக்கு - அமிர்தத்திற்குப் பதிலாக, மெல் - மெல்லிய, குறிஞ்சி - குறிஞ்சியில் கட்டிய, தேன் - தேனை, மாறும் - பண்டமாற்றாகப் பெற்றுக்கொள்ளும், வேங்கடமே - வேங்கடமலைதான், நன்கு - நன்றாக, உறிஞ்சி - உயிரையுங்கூட உறிஞ்சி, பேய் - பேயாகிய பூதகியினுடைய, தனம் - முலைகளை, சுவைத்தார் - சுவைத்தவரும்,

(பாற்கடல்கடைந்து) பிறர்க்கு - மற்றவர்களுக்கு, அமுது - அமிர்தத்தை; ஈந்து - கொடுத்து, ஈசனுக்கு - பரமசிவனுக்கு, வாய்த்த-கிடைத்த, நஞ்சு - விஷத்தை வைத்தார் - வைத்தவருமாகிய திருமாலினது, வரை - மலையாகும்.

விரிவுரை:— முன்செய்யுளில், தான் கூறவரும் உயர்வுநவிற்சிக்கு உதவியாக, யானை சந்திரனைப் பார்த்துத் தீம்பால் கவளம்என்று மயங்கியதென ஒரு மயக்கஅணியையும் கவி அதனுள் அடக்கிக்கொண்டார். அவ்வாறே இந்தச் செய்யுளிலும் பரிவருத்தனையணி என்னும் ஓர் அணி அடங்கியிருக்கின்றது. ஒன்றைக்கொடுத்து அதற்குப் பதிலாக வேறொன்றைப் பெறுவதை அழகுறக் காட்டுவது இவ்வணியின் தன்மை. வீரர் போர்க்களத்தில் நிலையிலாத் தம் உயிரைக்கொடுத்து நிலைபெற்ற புகழை அடைந்தார் என்பதும், அழிகின்ற செல்வத்தை அளித்து அழியாப்புகழடைந்தவர்வள்ளலார் என்பதும், பரிவருத்தனை அணியே. இங்கு, வானவர் தாம் அருந்தும் அமிர்தத்தைக் கொடுத்து, வேங்கடமலையில் வாழும் குறத்தியரிடமிருந்து, அம்மலையின் தேனை விரும்பி வாங்கிக்கொண்டனர் என்றதால், இதுவும் பரிவருத்தனை அணியாயிற்று. இந்தப் பரிவருத்தனையை முன்னிட்டுத் தேவர் அமிர்தத்திற்கும், மலைத்தேனுக்கும் ஒருதொடர்பு கற்பித்திருக்கின்றதால் தொடர்பு உயர்வுநவிற்சி அணியும் முன்னிரண்டடிகள் பெற்றுள்ளன. பரிவருத்தனை என்பது வடசொல். இதனைத் தமிழில் பரிமாற்றணி, மாறுட்டணி, மாற்றுநிலையணி என்னும் பெயர்களால் வழங்குவார்.

குறிப்பு:—குறிஞ்சி+தேன் = குறிஞ்சி த் தேன், என்று ஆனதும், பேய்+தனம்=பேய்த்தனம் என்றானதும், உறிஞ்சி+பேய்=உறிஞ்சி ப் பேய் என்று ஆனதும் தோன்றல் விகாரங்கள்.

## இலக்கணம்.

ஒலியின் அடையாளமான எழுத்துக்கள் புணரும்போது, தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் விகாரங்கள் அடையுமாயின் அப் புணர்ச்சியை விகாரப்புணர்ச்சி என்பர். இவ்வித விகாரங்கள் ஒன்றும் அடையாமல் அவ் வெழுத்துக்கள் அது அது இருக்கும்படியே இயல்பாக இருக்குமாயின் அந்தப் புணர்ச்சி இயல்புப் புணர்ச்சி. அவன் வந்தான், கண் பெரிது, செய்துபோனான், என்பனபோல் இருபதங்கள் தொடரும்போது எவ்வித விகாரமும் பெறாமல், நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டு மொழிகளிலும் உள்ள எழுத்துக்கள் எல்லாம் அப்படியே இயல்பாக நிற்கின்றன. கல்+சட்டி, முள்+செடி, பொன்+குடம் என்பன, சேரும்போது கற்சட்டி, முட்செடி, பொற்குடம், என ல், ள், ன், என்ற எழுத்துக்கள், ற் ட் ற் எனத்திரிந்தன. நிலம்+வரி, தேன்+மொழி, என்பன புணரும்போது, நிலவரி என்றும், தேமொழி என்றும், இறுதியிலுள்ள ம் ன் என்னும் எழுத்துக்கள் கெட்டன. தலை+பாகை, குதிரை+கால் என்பன, தலைப்பாகை, குதிரைக்கால் என்று புணரும்போது ப், க் என்னும் எழுத்துக்கள் தோன்றின.

இவ்வாறு, இயல்பாயிருப்பது எப்பொழுதென்றும், தோன்றுவது எப்பொழுதென்றும், திரிவது எப்பொழுதென்றும், கெடுதல் எப்பொழுதென்றும் தெரிந்துகொள்வதற்கு விதிகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிக் கூறும் விதிகள்தான் புணரிலக்கணம்.



மண்+கலம் என்று சேரும்போது, ணகரமெய் டகரமெய்யாகத் திரிந்து மட்கலம் என ஆகும். ஆனால், மண்+கரிது, எனச் சேருமானால் மண்கரிது, என இயல்பாகவே யிருக்கும். முன், மண்+கலம், என்றபோதும் நிலைமொழியின் இறுதியில் ணகரமெய்யும், வருமொழிமுதலில் ககரமும் இருந்தன. பின் மண்+கரிது, என்றதிலும் அப்படியே. ஆயினும் அங்குத் திரிதல்விகாரம் வந்தது, இங்கு வரவில்லை. ஆகையால் எழுத்துக்களைமாத்திரம் பார்த்தால் போதாது. அர்த்தத்தையும் பார்க்கவேண்டும். அதாவது நிலைமொழியும் வருமொழியும் என்னபொருளில் தொடர்கின்றன என்று தொடரிலக்கணத்தை நினைவிற் கொண்டுதான் புணர்வது இப்படி என்று சொல்லக்கூடும். மட்குடம் என்றது மூன்றும்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்கதொகை; ஆகையால் ணகரம் டகரமாகத் திரிந்தது. மண்+கரிது என்பது எழுவாய்த்தொடர், ஆகையால் திரியவில்லை. அப்படியே, நாய்+கால், என ஆறும்வேற்றுமைத் தொகையாயின் நாய்க்கால், எனக் ககரமெய் தோன்றியும், நாய்+கடித்தது என எழுவாய்த்தொடராயின் நாய் கடித்ததுஎனக் ககரம்தோன்றாமல் இயல்பாயும்வரும்.

நிலைமொழி யிறுதியையும் வருமொழி முதலையும் நோக்கிப் புணரிலக்கணத்தை நான்கு வகைகளாகப் பிரித்துக்கொண்டு கற்க ஆரம்பிக்கலாம்.

i. நிலைமொழி யிறுதியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் உயிரெழுத்துமாக வருவது.

சிறுவன்+அழுதான் ; பேய்+ஓடியது ; பெண்+எங்கே, தேர்+இழுத்தான்; முதலிய உதாரணங்களில், நிலைமொழியின் இறுதியில் உள்ள எழுத்துக்கள் ன் ய் ண் ர் என்னும் மெய்யெழுத்துக்களாகவும்; வருமொழி முதலில் உள்ள எழுத்துக்கள் அ ஓ எ இ என்னும் உயிரெழுத்துக்களாகவும் இருக்கின்றன. இது ஒரு வகை.

ii நிலைமொழி யிறுதியில் உயிர் எழுத்தும், வருமொழி முதலிலும் உயிரெழுத்துமாக வருவது.

அது+அழகு, காணா+ ஓடினான், கூசி+எழுந்தான், படிக்க+இருந்தான்.

இவ்வுதாரணங்களில், நிலைமொழி இறுதியில் இருக்கின்ற எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள். மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாராதது போலவே உயிரெழுத்துக்கள் இறுதியில் வரா. அவை உயிர் மெய்யெழுத்துக்களே. ஆனாலும், து,என்பது த்+உ என்று மெய்யும்உயிரும் சேர்ந்து ஆகும்போது,கடைசியில் ஒலிப்பது உ என்னும் உயிரெழுத்துத்தான். காணா என்பதிலும் அப்படியே காண்+ஆ, என, ஆ என்னும் உயிரெழுத்தே இறுதியில் ஒலிக்கின்றது ஆகையாற்றான் இவ்வுதாரணங்களில் உயிர் ஈற்றில் வந்திருக்கின்றதென்று சொல்கிறோம்—இது இரண்டாவது வகை.

iii நிலைமொழி இறுதியில் உயிரெழுத்தும் வருமொழிமுதலில் மெய்யெழுத்தும் வருவது

அது+பெரிது, காணா+கண், படிக்க+புத்தகம், வேங்கை+கொன்றது போன்றஉதாரணங்களில், நிலைமொழியிறுதி வருமொழிமுதல் இரண்டும் உயிர்மெய் எழுத்துக்களா யிருந்தபோதிலும், முன் சொல்லியபடி, நிலைமொழியிறுதியில் உயிரெழுத்தொலியும் வருமொழி முதலில் மெய்யெழுத்தொலியுமே வருவதை உச்சரித்து உணர்ந்து கொள்ளவேண்டும். காண் ஆ+க் அண்—இது மூன்றாவது வகை.

iv நிலைமொழி யிறுதியில் மெய்யெழுத்தும் வருமொழி முதலிலும் மெய்யெழுத்துமாக வருவது.

சிறுவன்+சிறித்தான், பேய்+கூத்து. பெண்+வந்தாள், தேர்+தட்டு; போன்ற உதாரணங்களில், நிலைமொழிஇறுதி வருமொழிமுதல், ஆகிய இரண்டிடத்திலும் மெய்யெழுத்துக்ளே வந்திருக்கின்றன. சிரித்தான், கூத்து வந்தாள், தட்டு ஆகிய வருமொழிகளின் முதலில், சி, கூ, வ, த என்னும் உயிர்மெய் எழுத்துக்கள் அல்லவோ வந்திருக்கின்றன. அப்படியிருக்க மெய்யெழுத்து என்று ஏன் சொல்கின்றோம் என்று சந்தேகப்படலாம். க். ங் ச் ஞ் போன்ற மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் ஒன்றுமே மொழிக்கு முதலில்வராது. அவைகள் மொழிக்கு முதலில் வருவதானால் உயிரோடு சேர்ந்து க, கா, கி கீ, ச, சா, சி சீ, என உயிர்மெய் யெழுத்துக்களாகவே வரும். ஆனால் க்+அ=க என்று ஆன உயிர்மெய்எழுத்தை உயிரும் மெய்யுமாகப் பிரித்தால் முதலில் இருப்பது க் என்னும் மெய்யெழுத்துத்தானே. ஆகையால் கரடி என்று சொல்லும்போது அச்சொல் க என்னும் உயிர்மெய்யெழுத்தை முதலாக உடையதானாலும் க் என்னும் மெய்யெழுத்தின் சப்தந்தான் முதலில் ஒலிக்கின்றது. ஆகையால் அது மெய்யை முதலாக உடைய சொல் என்று சொல்லலாம். உயிரெழுத்தின் ஒலியாகிய அ, என்பதை முதல்வைத்துப் பின் க் என்ற ஒலியைச் சேர்த்தால் க என்று ஆகாது, அக் என்றே ஆகும். க், என்னும் ஒலியை முதலிற் சொல்லி அப்புறம் அ என்னும் ஒலியைத் தொடரச் சேர்த்தால்தான், க, என்று ஆகும். எனவே, சிறுவன்+சிரித்தான், என்னும் உதாரணத்தில், (சிறுவன்+ச்+இ ரித்தான்,) ச், எனும்மெய்யெழுத்தே வருமொழி முதலில் இருப்பதற்காகப் புணரிலக்கணத்தின்பொருட்டுக் கொள்ளவேண்டும். அப்படியே, பேய்+க்+ஊத்து, என இவ்வுதாரணத்திலும் க், வருமொழி முதலில் உளது—இது நான்காவது வகை.

இவ்விதம் நிலைமொழி யிறுதியையும் வருமொழி முதலையும் நோக்கி நான்குவிதமாக அமைகின்ற புணர்ச்சியின் இலக்கணத்தை இனிக்கற்போம். அவைகளில், அரசன்+ஆண்டான், கள்+ஒழுகும், மேல்+எழுந்தான், என்பனபோல், நிலைமொழியிறுதியில் மெய்யெழுத்தும் வருமொழிமுதலில் உயிரெழுத்தும் வருகின்ற புணர்ச்சியின் இலக்கணம் வெகு சுலபம். அவ்வாறே, எண்ணி+இருந்தான், தீ+அவிந்தது, வந்த+அரசன், கொடுத்து+அழைத்தான், அது+எங்கே, என்பனபோல் நிலைமொழி இறுதி வருமொழிமுதல் ஆகிய ஈரிடத்தும் உயிரே வரப் புணர்கின்ற இலக்கணமும் சுலபமே. ஆனால் நிலைமொழியிறுதியில் உயிரும், வருமொழி முதலில் மெய்யும் வருகின்ற புணர்ச்சியும், அல்லது நிலைமொழி வருமொழி ஆகிய ஈரிடத்தும் மெய்யெழுத்தே வருகின்ற புணர்ச்சியும் தெரிந்து கொள்வதற்கு ஓரளவு முயற்சியும் பொறுமையும் வேண்டும்.

இதன்முன் கற்றிருக்கின்ற சொல்லிலக்கணமும் தொடரிலக்கணமும் மறவாமல் இருக்கும்படி செய்து கொள்ளவும்.

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

### 14. வரைக்காட்சிப் படலம்.

கலைதேரி புலவர் குறள்முறை கற்ருர்.

செந்நாப் போதாரார்க்கும் செந்தமிழ்க் கம்பருக்கு முள்ளுற இழைந்ததொரு வுறவின தருமை யெண்ணரிய நுண்மை வாய்ந்தது. முப்பாலி னடிகள் சிற்சிலவெடுத்துக் கம்பர் தம்நூலில் அமைத்திருத்தல் ஓடியாங்கு ஓதுவோரும் எளிதிற் கண்டுகொள்ளலாம்.

556 பக்கத் தொடர்ச்சி

இவ்விரு பெரும் நூல்கள் சொல்லளவிற் சிலபோது சேர்ந்து நடக்குமிது பெரிதொரு பொருளல தெனினும், கல்வியிற் பெரிய கம்பர் திருக்குறளைச் சிறப்பாக மதித்துப் பாராட்டும் பான்மைய ரென்பதற் காதாரமாகின்றது. ஆதலின், சொற்களது பொதுமை தோன்ருவிடத்தும், கருத்துக்கள் சில குறளினின்றெடுத்துக் கம்பர் கையாண்டாரென நினைக்கவுந்தகும். இன்னவாறு இவர் கையாண்டுள செவ்வியை நோக்குங்கால் கம்பர் கருத்துமுற்றத் தோய்ந்தது மாத்திரமல்லாமல் குறளினது பொருளை ஒவ்வோரிடத்தில் கடந்தும்விட்டனர்கொல் என ஐயுறவெய்தவும் நேர்கின்றது. இத்தகைய விடயங்களிற் சில ஈண்டாய்தல் சுவைதரும்.

வாய்மைபற்றிய வள்ளுவர் கொள்கை யாதென இப்பத்திரிகை ஈரிருதிங்களுக்குமுன் தன் தலையங்கங்களால் ஆய்வதாயிற்று. "வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றுந் தீமையிலாத சொலல்" என்பதனேடு, "பொய்மையும் வாய்மையிடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்னுங் குறளையுமிணைத்து நோக்கி, அத்தலையங்கம்

"வாய்மையறமே யாவற்றினும் உயர்ந்ததாய் மற்றவெலாம் தன்னேவல் கேட்கத் தனியரசு பெற்றதோ, மற்று வேருேரறத்திற்கு வாய்மை யிடையூருயமையுமெனின் இதுஉய்த்தவழி செலல் கடனன்றென்பதே தக்கதோ, என்னுமிவைகளை ஆராய்ந்து உண்மைநிலை யெதுவென்றுரைத்தல் எம்மனே ரியற்றுதற் கரியதொரு விடயமாம். இதுபற்றித் திருவள்ளுவர் எக்கருத்துக் கொண்டிருக்கின்றனரென்று நிச்சயமாகச் சொல்ல வியலாதபடி நாம் எடுத்தாண்ட அவ்விருகுறள்க ளமைந்திருக்கின்ற தன்மையைக் காட்டினேம். பரிமேலழகர் உரைகண்டபடி வாய்மையா லொருபோது தீமையும், பொய்ம்மையால் ஒருபோது நன்மையும் விளைவதற்கியலுமென்று வள்ளுவர் மதித்தாரோ, அல்லது நாமிங்கு ஐயுற்றபடி வாய்மையால் தீமையும் பொய்ம்மையால் நன்மையும் ஒருபோதும் விளையுமென எளிதில்எண்ணிவிட வேண்டாவென்றுறுதிகூறிஞரோ அறியோம். இந்நிலையில், வள்ளுவரைப் போல் காலத்திற்குந் தேயத்திற்குங் கட்டுப்படாதவராய் உலகத்திற்கே நிரந்தர வுரிமைவாய்ந்த உத்தமவித்தகர் வேறு எவரேனும் இவ்விடயத்தில் சிந்தை செலுத்திச் சில சொற்கள் சொல்லியிருப்பாராயின் அவைகளை இணைவைத்து ஒப்பு நோக்குதல் நேரிதாகும்"

என்று சாற்றிப் பாரசீகக்கவிஞ ரொருவரது சொற்களைச்சார்ந்து போகின்றது. மற்றுக் காலத்திற்குந் தேயத்திற்குங் கட்டுப்படாதவராய் உலகத்திற்கே நிரந்தர வுரிமைவாய்ந்தவர்களில் கம்பரும் ஒருவரென அத்தலைபங்கத் தாசிரியர் கருதற் கிசைவாரெனின் இதுபற்றி இவ்விராமாயணமும் உரைக்கக் கூடியதொன்றுளது. "ஆற்றலும் நிறைவுங் கல்வி அமைதியும் அறிவும் என்னும் வேற்றுமை இவனேடு இல்லையாம்" எனத் "தன் பெருங்குணத்தால் தன்னில் தானலது ஒப்பிலாதவன்" ஆய அநுமன், சுருதியின் தொழுதி யாவுமுற் றறிதருமொரு மாணியாகி இராமனுக்கெதிர் வந்து வினவியகாலை, கவிகுலத்தரசனைக் காணுமெண்ணத்தால்தான் வந்ததாக இராமன்கூற,கல்லாதகலையும் வேதக்கடலுமே என்னுங்காட்சி சொல்லாலேதோன்ற நின்ற வவ்வநுமன்,

எம்மையே காத்தி ரென்றற்
கெளிதரோ விமைப் பிலாதோர்
தம்மையே முதலிட் டான்ற
சராசரஞ் சமைந்த வாற்றல்
மும்மையே முலகங் காக்கு
முதல்வர்நீர் முருகச் செவ்வி
உம்மையே புகல்புக் கேமுக்
கிதின்வரு முறுதி யுண்டோ

[எங்களை மட்டும் நீங்கள் காக்கவல்லவர் என்பது அற்பமன்ருே. நீங்கள், இமைத்தல் இல்லாத தேவர்கள் முதலாகச் சராசரங்கள் பொருந்தி நிறைந்த வலியமைந்த மூவ்வேழு உலகங்களையும் காக்கும் முதல்வர்களாவீர். இளமையின் அழகுவாய்ந்த உங்களையே அடைக்கலம் புகுந்த எங்களுக்கு இதைவிட மேலான நன்மை வருதற்கு வேருென்றுளதோ]

என யாதும் ஒளித்தலின்றி, இராமபிரானது பரத்துவத்தைத் தான் உணர்ந்துகொண்ட பெற்றியை அவனிடத்து உரைசெய்தானுனலும் அடுத்தகவியில்,

யாரென விளம்பு கேனு
னெங்குலத் தலைவற் கும்மை
வீரநீர் பணித்தி ரென்ருன்
மெய்ம்மையின் வேலி போல்வான்

["வீரனே, எம் குலத்தலைவனுகிய சுக்ரீவனிடத்தில் நீங்கள் யாரென்று நான் உரைப்பேன். அதைச் சொல்லுங்கள்" என்று, சத்தியத்தின் வேலிபோல்பவனுகிய அநுமன் கேட்டான்]

என்று கம்பர் தேர்ந்த மொழிகளால் கிட்கிந்தாகாண்டத்துள் மராமரப்படலத்தில் உரைத்திருக்கும் பெருமையைக் காணலாம். மெய்ம்மையின் வேலிபோல்வான், என்னும் அடைமொழிகளாற் கம்பர் அநுமனை இங்குச் சிறப்பித் திராராயின், "மும்மைசால் உலகிற்கெல்லாம் மூலபுருடன் என்பதை யான்உணர்ந்தேன்; ஆயினும் இம்மாநுட வுருவிற்கேற்ற உன் பெயரும் வரலாறும் இன்னதென்பதையும் சுக்கிரீவனுக்கு யான் உரைக்க வேண்டுமாகையால், அதனையு மியம்பியருள்க" என்பது மட்டுமே அநுமன் வினவியதன் கருத்தெனக் கொள்ளலாம். அது இயற்கையு மாகும்.



கல்வியும் அறிவும் மறைநூல்துணிபும் முற்றும் பெற்றுச் சத்தியத்தைக் காக்கின்ற வேலிபோல்வான், "யாரென விளம்புகேன், பணித்திர்" என்ருன் என வருதலால், "பெரும, நீ ஆதியம்பரம னென்பதறிவேன். எங்குலத் தலைவன்மாட்டு அவ்வாறே சென்றியான் இயம்பவேண்டு மென்பது உன் கருத்தோ? மற்று, அதனை மறைத்து வேறேதேனும் விளம்பவேண்மென்பது உன்திருவுளமோ. இதனை மறைத்துரைத்தலே ஈண்டு நன்மைபயக்கும் என நினைப்பாயாயின், பணித்தி, அன்னபடி செய்வேன்," என்று கூறினன் எனவிங்குக் கொள்ளுதல் கூடும். இவ்வாறு பொருள்கொள்வதன் முறைமையை வலியுறுத்தி, 'விளம்புகேன்', 'பணித்திர்', என்னு மவ்விரு சொற்களும் இச்செய்யுளில் நிற்கின்றன. விளம்புதல் இயம்புதல் உரைத்தல் என்னுமிவை ஒருபொருட் பன்மொழிகளாக விரவிவரு மெனினும், சிறப்பாக உரைத்தலென்பது விடயத்தையும், இயம்புதல் என்பது கூறுபவனையும், விளம்பல் என்பது கேட்போனையும் முன்னிட்டு நிகழ்கின்றன. விளம்புதலென்னும் மொழி பயிலும்நெறியினை நுணுகிநுணிகி ஆயுங்கால் செப்பப்படும் பொருள் கேட்போனுக்கு எத்தகைய நினைவினை விளைவித்தல் வேண்டுமெனுங் கருத்து அதனுள் கலந்திருக்கக் காணலாம். இருப்பதொன்ருக அதனைச் சிறிதும்பெரிதும் வேறுபடச் சாற்றுதல் விளம்புகின்ற செய்கையாம். வியாபார'விளம்பரங்கள்' இப்பொருளை ஐயமில்லாவகை காட்டித்தருகின்றன. ஆதலின், 'கேட்பதற்கிருக்கும் சுக்கிரீவனுக்கு என்ன பொருள் படும்படி பேசுவது' என்னும் எண்ணத்தால் 'விளம்புகேன்' என்றசொல் அநுமான்வாய் வரலாயிற்று. 'உரைத்திர்' என்னது 'பணித்திர்', என்றதும், இராமனது வரலாற்றினும் அவனது ஆக்கினையையே வேண்டியதாகும்.

இச்செய்யுளின் முன்னிரண் டடிகளை மட்டுமே முன்னே கூறினேம். பின்னிரண்டடிகளுக்கு முற்றிலும் மாருன இருவேறு பாடங்கள் உள.

வார்கழ லிளைய வீரன்
மரபுளி வாய்மை யாதுஞ்
சோர்வில னிலைமை யெல்லாந்
தெரிவுறச் சொல்ல லுற்ருன்

[அநுமன் அவ்வாறுகேட்க, நீண்ட கழலைஅணிந்த இலக்குமணன், சொல்லவேண்டிய தகுதி இன்னதென்பதை மனதிற்கொண்டு, உண்மையொன்றும் வழுவாதவனுய்த்தங்களுடைய நிலைமை எல்லாம் தெளிவாகச் சொன்னுன்]

என்பது ஒருபாடம். அநுமன்தன் குறிப்புணர்ந்து இலக்குமணன், 'மரபு' உரைத்தானன்றித் தம்மைத் தெரிவித்துக் கொள்ளவில்லை. தகுதிவழக்கே தக்கதென நினைத்தான். இவன் உண்மைவழாது உரைத்ததெல்லாம் தங்கள் நிலைமையையே யன்றித் தன்மையை யன்று. இக்கருத்து,

வார்கழ லிளைய மைந்த
மற்றுநம் மரபி யாவும்
சோர்விலா துரையென் றையன்
சொல்லலுஞ் சொல்ல லுற்ருன்

["நீண்ட கழலையணிந்த தம்பி இலக்குமணு, ஆயின் நம்முடைய மாபையெல்லாம் ஒன்றுவிடாது இவ்வநுமனுக்கு உரைத்திடுக' என்று இராமன் சொல்லவும், இலக்குமணன் அவ்வாறே சொல்லலானுன்]

என்னும் மற்றையபாடம் பின்னுந் தெளிவாகக்காட்டுகின்றது. தாம் பிறந்தநாள்முதல், இராவணன் இழைத்த மாயப் புன்தொழில் இறுதியாக இலக்குமணன் யாவுங்கூறினுன். இதனைக் கேட்டுச்சென்ற அநுமன் சுக்கிரீவனிடத்தில் இராம இலக்குமணர்களைப்பற்றிக் கூறியவைகள் அடங்கியிருக்கின்ற செய்யுள்களை நோக்குங்கால், அநுமன் அற்றங்காக்காது இவர் பரத்துவத்தைப் பசர்ந்திடுவதுபோல் இரண்டோரிடங்களில் தோன்றுமெனினும், அவையனைத்தும் புகழ்ச்சியணியெனும் நலத்தினுள் நன்கு பொருந்திவிடக் கூடியவைகளே. 'ஆயமாருகர்தாழாழியானேயலால்' என்னுந் தொடக்கமுடைய அச்செய்யுளின் நோரான பொருளைச் சுக்கிரீவனேனும் அறிந்திருப்பான் என்று எண்ணிக்கொளினும், திருமாலே இவ்விராமன் என்னும் உண்மையை அநுமன் அவனுக்கு அறைந்துவிட்டான் என முடிவுசெய்வது இன்றியமையாததன்று. "யாரென விளம்புகேன்," என்று இராமனை வினவிய மாருதி, சுக்கிரீவனிடத்தில் செப்பிமுடிக்கும்போது, மீண்டும் "ஈனையரென்று உரைசெய்கேன் இரவிதன் சிறுவனே" என்றே குறை சில இருப்பதைக் குறிக்கின்ருன். இராமனை வினவியபோது தான் கொண்டுசெல்லும் வதந்தியைக் கேட்பதற்கிருக்கும் சுக்கிரீவனை நினைவில் முக்கியமாய்க்கொண்டு 'விளம்புகேன்' என்னுஞ் சொல்லையும், சுக்கிரீவனிடத்தில் மொழிந்தபின் எஞ்சியது தன் கூற்றிற்கு விடயமான இராமனே யாதலால் "உரைசெய்கேன்" என்ற சொல்லையும் அநுமன் பயின்றது, இச்சொற்களுக்குள்ள பொருள்வேறுபாட்டின் தன்மையைச் சற்றுமுன் இங்குக் காட்டியபடி வற்புறுத்துகின்றது.

ஆதலின், உள்ளதை உள்ளபடி உரைப்பதல்லால் தருமநெறி பிரிதில்லை என்னும் நினைவுபோக்கி அநுமனே, விளம்புமாறு யாதென வினவுதற் கொவ்விஞுயினன். ஆயதால், "வாய்மை யெனப்படுவ்தி யாதெனின் யாதொன்றுந் தீமையிலாத சொலல்" என்ற விதியைச் சகலசாஸ்திர பண்டிதனுய அநுமன், "இதனல், நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அதுதானுந் தீங்குபயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாம், என்பது கருத்து" என வதற்குப் பரிமேலழகர் கண்டவுரைக் கிணங்கியே ஏற்றுக் கொண்டனன். அவ்வாறு அவன் ஏற்றுக்கொண்டதால் வாய்மையின் வாரம் வழுவினனல்லன் என்றுதான் அவன்சார்பு நிற்கின்ருரென்பதைக் கம்பர், "மெய்ம்மையின் வேலி போல்வான்" என வியந்து பாராட்டும் வாயிலாக வுறவுறக் காட்டினர்.

பரிமேலழகர் கம்பரது காலத்திற்கு முற்பட்டவரோ பின்பட்டவரோ வென்னுமிது துணிந்துரைத்தற் கியன்றதன்று. மற்று, திருக்குறளின் உரைகளில் எவையெவை கம்பருக் கெட்டியிருத்தல் கூடும் என்பதும் இன்று தேர்வதற்கியலாது. ஆயினும் இற்றைநாள் நாம் பெற்றுள பரிமேலழகர் மணக்குடவர் இருவரும் ஒருகுறளிற்குக் கண்டுள உரையைக் கம்பர் பெரிதும் அயிர்த்தனரென நினைப்பதற்கொத்த செய்யுளொன்று இராமாயணத்தில் வந்துளது. இதனை, இப்பத்திரிகையில் சென்றவாண்டு திருக்குறட் குமரேசவெண்பாவைப் பற்றி வந்துள மதிப்புரையினின்றறிகின்ருேம். நீத்தார் தம் பெருமையை வெகுளியின் ஆற்றலால் வற்புறுத்திக் காட்டுவார் என்று

பொருள்படுவதாக இதுகாறும் கருதியிருந்த, "குணமென்னுங் குன்றேறிநின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" என்னுமக் குறள் இப்பொருள்தான் பட்டுத் தீரவேண்டுமெனும் நியதியிலதென அம்மதிப்புரையின்கண் ஆராயப்பெற்றிருக்கின்றது. அம்மதிப்புரையாசிரியர், இக்குறளின் உரைகளைச் சோதித்துப் பின் ஆன்றோர் மொழிகள் சில சான்றுகூறி,

"சிவப்பிரகாச சுவாமிகள் நேராகவும்,உவமையாகத் திருத்தக்கதேவரும் தாங்கொணு வெகுளியைப் பாராட்டாமல் அது தங்கிநில்லாமையே நீத்தார்க்கு உரித்தாய் நினைத்தாரெனின், கம்பர் பிரான் சிலேடையாக இக்குறட்கு இக்கருத்தே காட்டுமாறு அமைந்துள்ளதாய்,

தூப முற்றிய காரி ருட்பகை
 துள்ளி யோடிய வுள்ளெழும்
தீப முற்றவு நீர்த்த கன்றன
 சேய தாருயிர் தேய்தலால்
பாப முற்றிய பேதை செய்தப
 கைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றமி கச்சி வந்தன
 னொத்த னன்குணக் குன்றிலே

என்று பாடியுள்ள ஓர் செய்யுள், அவர் நூலில் தோன்றி நிற்கின்றது சிலேடையாய்க் குண . மென்னுங் குன்றேறி நின்றான் வெய்யோன் கோபமுற்றிச் சிவந்தன னாயினும் யாருக்கும் ஒரு தீமை செய்யாது இனி ஓர் கணத்தினுள் வெளுத்துவிடுவான் அன்றோ!"

எனக்காட்டுகின்றார். குணமென்னுங் குன்றேறிநின்ற சுடர்க்கடவுள் தன்னையுமயர்ந்து வெகுண்டதற்கு நாணியே வெளுத்துவிடுவான் எனக்கூறினும் அமையும். மற்றுக் கம்பர் சூரியனை 'வெய்யவன்' எனக்குறிப்பதிலும் ஓர் சிலேடை இருக்கலாம். இயற்கையில் இவன் வெய்யவனுதலால் குணக்குன்றேறினானேனும் வெகுளியாற் சிறிது நேரமாதல் சிவக்கலாயினன். வெம்மை யாவும் அறவே நீத்த அந்தணர் கணமும் கனன்று நில்லார் என்பதைக் கம்பர் காட்ட முயல்கின்றார்போலும். இதனுன், நீத்தார்க்குரிய பெருமையை நிறைவுற நல்கவந்த வள்ளுவர் ஈகையை இடைநின்று விலக்கு மிவ்வுரைகளை விலக்கிவைக்கும் நன்றிக்குக் கம்பர் பாத்திரராகின்றனர். கலைஞர் இலரெனின் கடவுளர் கதி என்னும்!

# மதிப்புரை

## பெருமாள் திருமொழி.

இது, பிரசங்கபூஷணம், பு. பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் வரைந்துள்ள பதவுரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவற்றுடன் பதிப்பிக்கப்பெற்றது.

விலை.—காலிகோ பைண்ட் ரூ. 1-4-0. சாதாரண பைண்ட், ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு) புத்தகம் கலாநிலயம் ஆபீஸில் கிடைக்கும்.

மன்னுயிருந்தும் மாயோனை வழிபட்டு முத்தியிலருத்தியுற்ற குலசேகராழ்வார் நயந்தருளிய திருமொழியி லீடுபட்டிளகாதஉள்ளத்தர் ஈங்கில்லை. அதனை ஓதியிரார்தாமே அதனருமைக்கயலாராயிருப்பாரன்றி இத்திருமொழிகளி லொன்றையேனும் ஒருதரமேனும் ஓதியவர் ஒருநாளும் மறக்கமாட்டார். கல்விப் பயிற்சி பெரிதுடையோர் இதயங்களிக்கக் கமழ்தரு தமிழ்மணத்தது கம்பர் நூலெனின், அஃதிலாதார்க்கும் நாவில்பட்டவுடன் தித்திக்கும் நன்னலமுடையன ஆழ்வார்களருளிய இன்னியல் மொழிகள். சிறுகுழந்தைகள் வெறும் சர்க்கரைக்கவாவும் ; பாலர்பருவம் கடந்தவர் சர்க்கரையோடு பல்சுவைப் பொருள்கள் கலந்த பக்கணங்களே வேண்டுவர். எனினும் அச்சர்க்கரை யின்றிப் பக்கணமில்லை. இப்பக்கணத்தைத்துய்க்க வரும் சுவையெலாம் அச்சர்க்கரையின் தத்துவமே. குலசேகராழ்வார் போன்றவர்களது திருமொழிகளுக்கும் கம்பர் போன்றவர்களது காவியங்களுக்கும் உள்ளதோர் தொடர்பின் மேன்மை இன்னதன்மைத்து. எனின் ஆழ்வார்களது திப்பியமொழிகளை யாவரும் எளிதில் படித்துணருமாறு நூல்கள் எழுதித்தருபவர் உலகிற்கு விலைசெயற்கரிய உதவி செய்பவராகின்றனர்.

அவ்வுதவி இந்நூலால் செய்துளார் பிரசங்கபூஷணம் என விளங்கும் ஸ்ரீமான் பு. பா. இரத்தினசபாபதி நாயகர் அவர்கள். இவர் இலக்கணப்பயிற்சியும் இலக்கியச் சுவையும், சமயநூலாராய்ச்சியும் நன்கு வாய்ந்தவர். குலசேகரப் பெருமாளது திவ்விய சரிதத்தை நூன்முகமா யெழுதியிருப்பதினின்று செந்தமிழ் நடைச்சுவையி னருமையை இனிதுணர்ந்தவர் இவ்வாசிரியர் என்பது எவர்க்கும் புலப்படும். ஒவ்வொரு செய்யுளிற்கும் பதவுரை வரைந்து, அதனுளடங்கிய விஷயங்களை விரிவாக விளக்கிக்காட்டி, அதன் உண்மைப்பொருளை உணர்தற்குவேண்டிய பிறவிடயங்களையும் தேர்ந்து ஓதி, இலக்கணக் குறிப்புக்களையும் சேர்த்து, நல்ல காகிதத்தில் பதிப்பிக்கப் பெற்றிருக்கும் இந்நூல், தமிழில் பயில விரும்புவோர்க்கும், ஆழ்வாரது பெருமையை அறிய விரும்புவோர்க்கும், எம்பெருமான் திருவருட்கு அருத்தி புரிவோர்க்கும், யாவர்க்கும் அருந்துணையாய் அமையுமென்பதற்கோ ரையமில்லை. சிந்தையும் செயலும் சிதைவுற்றுத் திரிதரு மிந்நாள் இத்தகைய நூல்கள் தோன்றுத்துணையாய் உறுதி பயக்குமென் றியம்பவும் வேண்டுமோ! ஸ்ரீமான் இரத்தினசபாபதி நாயகர் தமது கல்வியையும் அறிவையும் இத்தகைய துறைகளில் ஈடுபடுத்தியது தமிழுலகம் செய்த பாக்கியமேயாகும். அலாநெறிக்கே திரியும் உலகத்தவர்பால் உண்மையான இரக்கமே தூண்ட அவர்களைப் பரமபுருடனிடம் ஆற்றுப்படுத்துமாறு நல்கிய இந்நூல் நெடுநாள் நிலவுக. சைவநூல்களிலும் வைணவநூல்களிலும் ஒருங்கே பயின்று ஒன்றிய உணர்வுடன் அநுபவிக்கும் இவ்வாசிரியர் சமரச சிந்தையராய் விளங்குதல் இயற்கையே.

இந்நூல் வெளிவருதற்கு உதவிய, அல்லூர் வெங்கிடாத்திரி மந்திர அமைச்சர் அ. ப. எல்லப்ப நாயகர் அவர்களது முயற்சியைப் பாராட்டுகின்றோம்.



# வர்த்தமானம்

தமிழ்நாட்டு மஹாநாடு:— தமிழ்நாட்டு அரசியல் மஹாநாடு அடுத்த மாதம் வேதாரண்யத்தில் கூடுமென்றும், அதுசமயம் குஜரத் வாசியான வல்லபாய் பட்டேல் மஹாநாட்டில் தலைமை வகிப்பார் என்றும் தெரியவருகிறது.

***

சுகாதாரவாரம்:—சென்ற வாரம் லக்ஷிமிபுரம் சொ. வித்தியாசாலையில் சுகாதாரவாரம் கொண்டாடப்பட்டது. திருப்பத்தூர் ஹெல்த்ஆபிஸர் தலைமைவகித்து, மாஜிக்லாண்டர்ன் துணைகொண்டு சுகாதாரப் பிரசங்கம் செய்தார் என்று ந சொ. அரு அருணாசலம் செட்டியார் தெரிவிக்கின்றார்

***

துருக்கியில் வெள்ளம்:— துருக்கியில் கனத்த மழைபெய்ததினால் வெள்ளமேற்பட ஒரு ஜில்லாவில் 30 கிராமங்கள் தண்ணீரில் முழுகிப்போயின வென்றும் 500 பேர் தண்ணீருக்கு இரையாயினர் என்றும் ஆயிரக்கணகான ஜனங்கள் கஷ்டப்படுகின்றரென்றும் தெரியவருகிறது

***

சென்னைச் சட்டசபை அங்கத்தினர்:—சென்னைச் சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீமான் பக்தவத்ஸல நாயிடு அவர்கள் சென்றவாரம் காலஞ்சென்றார். சில தினங்களுக்குமுன் அவருக்கு ஜுரம் கண்டதென்றும், திடீரென்று இறந்துபோனார் என்றும் தெரிகிறது. அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், பொதுஜன இயக்கத்தில் பெரிதும் ஊடாடியவர்.

***

அமெரிக்காவில் ஒரு தகப்பனும் பெண்ணும் மோட்டாரில் சென்று கொண்டிருந்தனர். தகப்பன் மோட்டாரை ஓட்டினான். அப்பொழுது அவ்வண்டி ஒருபள்ளத்தில் இறங்கிக் கவிழ்ந்துவிட்டது. அதனால் பெண்ணிற்குப் பலமான காயம் ஏற்பட்டது. பெண் குணமடைந்தவுடன், தகப்பன் மீது தாவாச்செய்து ஆயிரம்டாலர் நஷ்டஈடு வாங்கிவிட்டாள். இத்தகைய நிகழ்ச்சிகள் அமெரிக்காவில் சகஜம் என்று தெரிகின்றது.

***

ஸர். எம். ஸி. டி. முத்தைய செட்டியார்:—தனவைசியப் பிரமுகரான ஸர். எம். ஸி. டி முத்தைய செட்டியார் சென்றவாரம் காலஞ்சென்றார். அன்னார் குடும்பத்தாரும், நண்பர்களும், மற்றவரும் மனம் வருந்த 42-வயதும் முடியுமுன்னர் மண்ணுலக வாழ்வை நீத்தார். செல்வர்க் குரிய குணங்கள் யாவும் வாய்க்கப்பெற்றவர் ஸர் முத்தையசெட்டியார்.

***

திவான்பகதூர் ஓ. டி. தணிகாசலம் செட்டியார்:— சென்னை ஸ்மால்காஸ்கோர்ட் பிரதம ஜட்ஜியாயிருந்த ஓ. டி. தணிகாசலம் செட்டியார் அவர்கள் சிறிது காலமாக, நோயுற்றிருந்தார். வயித்தியர்கள் சென்றவாரம் ஆபரேஷன் செய்தனர். 21-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இறந்துபோனார். அவருக்கு நீர் ரோகமிருந்ததென்றும், அதுதான் மரணத்திற்குக் காரணமென்றும் தெரிகின்றது.

***

மாதர் சத்தியாக்கிரஹம்:— "லாகூர் மாஜிஸ்டிரேட், அரசியல் சம்பந்தமான ஊர்வலம் போகக்கூடாது என்று உத்திரவு பிறப்பித்திருந்தார். சில மாதர்கள் ஒன்று சேர்ந்து 'கலகம் வாழ்க' என்று கூவிக்கொண்டு ஊர்வலத்தை நடத்திவிட்டனர்" என்று லாகூர்ச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

லண்டன் ஹைட்பார்க்கில் கலகம்:—ஒருலண்டன் செய்தி கூறுகிறது:—

லண்டன் ஹைட்பார்க்கில் மார்மன் வகுப்பைச் சேர்ந்த பாதிரிமார்கள் சமயப்பிரசங்கம் செய்தனர். இவ்வகுப்பைச் சேராத காதலிக் வகுப்பினர்பலர் அங்குக்கூடிப் பாதிரிகளைக் கேள்விகேட்கத் துவக்கினர். கூட்டம் வலுக்கவே, மார்மன் பாதிரிகள் கலகம் நடக்குமோவென்று அஞ்சி, வேறுவிடம் சென்றனர். கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவன் அப்பாதிரிகளைத் தாக்கினான். மற்றவர்களும் அவனைப் பின்பற்றினர். உடனே போலீசார் வந்து கலகத்தை அடக்கிச்சிலரை கைதுசெய்தனர். மார்மன் பாதிரிகளுக்குப் பலமான காய மேற்பட்டதென்று தெரிகின்றது.

***

காங்கிரஸ்காரரின் வருங்கால வேலை:—பாரிஸாலில் சென்றவாரம் சுபாஷ் சந்திரபோஸ், இனிச் செய்ய வேண்டிய வேலையைப்பற்றிப் பேசியதாவது:—

'டிசம்பர் மாதம் 31-ந்தேதிக்குப் பின், குடியேற்ற நாட்டுரிமை நமக்கு அளிக்கப்படாவிடின், காங்கிரஸ்காரர், கவர்ன்மெண்டை நிர்ப்பந்தம்செய்யச் சட்ட மறுப்பையோ, அல்லது வரிகொடா இயக்கத்தையோ அல்லது இரண்டையுமோ ஆரம்பிக்கவேண்டும். இப்படிப் போராடவேண்டிக் காங்கிரஸ் திருத்தி அமைக்கப்படவேண்டும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட குறையை வைத்துக்கொண்டு சட்ட மறுப்பை ஆரம்பிக்க வேண்டும்.'

***

பம்பாய் மாகாண நிலத்தீர்வை:—பம்பாய் மாகாணத்தில் சில விடங்களில் நிலத்தீர்வை அதிகப்படுத்தப்பட்டது. அதுபற்றி மஹாராஷ்டிரத்தில் வரிகொடாஇயக்க ஏற்பாடு நடந்துகொண்டுவந்தது. இத்தீர்வை விஷயமாய்ப் பம்பாய்ச் சட்டசபைஅங்கத்தினரான வி. ஆர். ஷராப் என்பவர் பம்பாய்க் கவர்னருக்குப் பின்வரும் கடிதம் எழுதினார்:—

"நிலவரியை மனம்போனபடி உயர்த்திக்கொண்டு போதல் ஏழை விவசாயிகளுக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணும். அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் பிடிவாதமாயிருந்தால் கட்டாயம் வரிகொடா இயக்கம் நடந்தே தீரும். பர்தோலி போலவே மற்ற விடங்களிலும் தீர்வை போதிய காரணமிலாது உயர்த்தப்பட்டுள்ளது. ஏழைகள் வரிப்பளு தாங்காது சட்டவிரோதமான இயக்கத்தில் சேருவதற்கு அரசாங்கத்தார் சந்தர்ப்பம் கொடுக்காதிருக்க வேண்டுவது அவசியம். ஆகவே அரசாங்கத்தார் தீர்வை விஷயமாய் ஆலோசித்தல் நலம்.

இதற்கு அரசாங்கத்தார் பதில்:—'தீர்வை விஷயமாய் ஆலோசித்துத் தக்கமுடிவைச் செய்ய அரசாங்கத்தார் ஏற்பாடு செய்துள்ளனர். அம்முடிவு சட்டசபையின் யோசனைக்கு வரும். அதுவரை இப்பொழுது அதிகப்படுத்தப்பட்ட தீர்வை வசூலிக்கப்படாது.'

ஜனங்களும், அவசியமிருப்பின் வரிகொடா இயக்கத்தைத் துவக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்து வருகின்றனர் என்று தெரிகின்றது.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

**"KALANILAYAM"**

*11, VELLALA STREET.*

**Purasawalkam MADRAS.**

189064

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும்

*கலா நிலயம்*

செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும்.* T. P. *மீனாட்சிசுந்தரம்* M. A .B. L.—51 *கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை*—T. N. *சேஷாசலம்,* B. A. B. L. 51 *கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஓதற்பிரவு வரை*—K. *இராமரத்நம் ஐயர்* B. A. 18 *கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல்.* T. N *சேஷாசலம்* B. A. B. L. 51 *இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நீட்ஷேன் எபிகுயூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்*—T. R. *இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. *சொக்கம்மாள்* B. A; L. T. *எழுதியது* 6 *கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்*—E. N. *தணிகாசல முதலியார்* B. A. B. L. 8 *கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (*மொழி பெயர்ப்பு*)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.*—R. *முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.*—20 *கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்*—14 *கட்டுரைகள்.*

*நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | *பையின்டு செய்யாதது* | *உள்நாடு ரூ* 8—0—0 | *வெளிநாடு ரூ* 9—8—0 |
| | *ஆப்லெதர் கில்டுபயிண்டு* | *உள்நாடு ரூ* 10—0—0 | *வெளிநாடு ரூ* 11—8—0 |
| | *காலிகோ பயிண்டு* | *உள்நாடு ரூ* 9—8—0 | *வெளிநாடு ரூ* 11—0—0 |

*கலா நிலயம் ஆபீஸ்,* 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

**Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)**